
# மாருதம்

6

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY



மக்கள் சஞ்சிகை

ரூ. 15/-

தமிழ்த்தாய் மன்ற வெளியீடு

For all your Optical Requirements

just step into

# S·M·FERNANDO

'OPTICIANS'

580, HOSPITAL ROAD, JAFFNA.

(Near Bank of Ceylon)

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY
-7-4-1994

# இதயத்திலிருந்து...

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

பயணம்: 02 தை — பங்குனி 1994 பாதை: 06

தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்கள் வேதனைகள் ஒய்ந்த பாடில்லை.

மக்கள் மரணக்காற்றை சுவாசித்தே வயிற்றை நிரப்பிக்கொள்கிறார்கள்.

இனி, 'வேதனைகள் எல்லாம் சாதனைகளில் முடியும்' என்கிற போதனைகளை செவிப்பறைகள் ஜீரணிக்காது.

நாங்கள் எங்களிடம் ஊடுருவிச் செல்வோம்; மனதினை அதன் ஆழத்தினை அறிந்து வாழ்வினை வளமாக்குவோம்.

வளமான வாழ்க்கை மாற்றமாக மிளிரும்.

புதிய மாற்றம் புரட்சிகர சிந்தனையினையும் சிந்தனைப் புரட்சியையும் தரும்.

வாழ்வை ஏற்றமாக்க ; எதிர்காலத்தைச் சுபீட்சமாக்க மாற்றம் வேண்டும்.

— யாதுமூரான்

காப்பாளர்கள் :

திரு. இ. பாஸ்கரன்
திரு. இராஜேஸ்வரன்

ஆசிரியர் குழு :

அக்கரைச் சக்தி
சமுத்திரபந்தன்
மல்லிகை மைந்தன்
உரும்பையூர் முரளி
நிலாமகன்

மன்ற ஆலோசகர் :

திரு. க. கனகராசா

மாற்றம் ஆலோசகர்கள்:

கலாநிதி. அ. சண்முகதாஸ்
திரு. ஆ. மகாலிங்கம்
திரு. வி. மாணிக்கம்
திரு. பொ. நடராசா
திரு. P. E. சின்னத்துரை
திரு. சி. வ. ஆறுமுகசாமி
திரு. சி. வைகுந்தசாமி
திரு. அருள் பிலிப்பையா
ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம்
திருமதி P. S. ஸ்கந்தராசா
திரு. இ. மகேந்திரன்
திரு. இ. ஜெயராஜ்
திரு. க. ஜெயரட்ணம்
திரு அ. பஞ்சலிங்கம்
திருமதி. ச. சிதம்பரநாதன்

விநியோகம்.

க. சுமணன்
கி. ஞானவதனி
கா. நடேசலிங்கம்
சபேஷன்
யூலியஸ்
கஜன்
குகதாஸன்
V. M சுப்பிரமணியம்

## எப்படி வந்தது?

### தாய்லாந்து

சயாம் என்பதே தாய்லாந்தின் பழைய பெயர். அவர்களுடைய மொழியில் ''தாய்'' என்றால் சுதந்திரம் என்று பொருள்படும். கீழைத்தேச நாடுகளில் ஐரோப்பியர் வசப்படாமல் இருந்த சுதந்திர நாடு என்பதால் தாய்லாந்து என்று வழங்கப்பட்டது.

### கொடி தாழ்த்தல்

பெரியவர்களின் மறைவையொட்டி நாட்டின் தேசிய கொடியை அன்றி அவரைச் சார்ந்துள்ள கட்சிக் கொடியை எவ்வளவு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறதோ அவ்வளவு நாட்கள் அரைக்கம்பத்தில் பறக்க விடுவது உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ள பழக்கம் இது எவ்வாறு வந்தது தெரியுமா?

கடற்போர்களில் தோற்றுப் போனவருடைய கப்பலில் பறக்கும் கொடிக்கு மேல் வென்றவருடைய கொடியைப் பறக்க விடுவது வழக்கம். தோற்றவர் பணிந்து விட்டார் என்பதைக் காட்டும் அறிகுறி இது.

இறந்து போனவர் எமனிடம் பணிந்ததற்கு அடையாளமாக கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடும் வழக்கம் நிலவுகிறது. இந்தக் கொடிக்கு மேலாக எமனுடைய கொடி பறப்பதாக ஒரு நம்பிக்கை. மூட நம்பிக்கையில் தொடங்கி மிக முற்போக்கான நாடுகளிலும் மாறாமல் நிலைத்து விட்ட பழக்கம் இது.

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

# ••• அகத்தே •••

5 – 8 பிரச்சினைகளும் தீர்வுகளும்

நீதிமன்றங்களாலோ தண்டனைகளாலோ பிரச்சினைகளை மேலோட்டமாகத் தீர்க்கலாமே தவிர அதனால் ஏற்பட்ட வடுக்களை ஒரு போதும் தீர்க்கமுடியாது.

11 – 13 புதிய கலாசாரங்கள்

இலவச கல்வி முறையின் நடைமுறை பற்றி வெளிக்கொணரும் சிறுகதை.

15 – 18 இருட்டில் இருக்கும்......

நூதனப்பொருட்களின் அவல நிலையை நேரில் பார்த்து எழுதியிருக்கிறோம்.

19 – சிந்தனை

உங்கள் சிந்தனைக்கு... ..

23, – 24 பெண் விடுதலை

''உள்ளத்தினால் ஏற்படும் உண்மையான மாற்றத்தினாலேயே பெண்விடுதலை அமையும்'' என்கிறது கட்டுரை.

25 – 28 புற்றுநோய்

உலகில் மூலை முடுக்கெல்லாம் கறையான்கள் மட்டுமல்ல. மனிதருக்காக புற்றுநோய்களும் புற்றெடுத்துள்ளன என்கிறார் மருத்துவபீட மாணவன்.

25 – 32 தமிழில் பேசுவது .........

இருமொழிப் பண்பு என்றால் என்ன? அப் பண்பு தமிழ்மொழியில் உள்ளதா??......

35 – 36 பெண்களை கவர என்ன வழி?

ஜெயராஜ் பதிலளிக்கிறார்.

37–38 உடல் உறுப்புகள் பற்றி

முடியிலிருந்து அடிவரை சாதாரண கவிஞர்கள் மட்டுமல்ல திருவள்ளுவரும் பாடியுள்ளார்.

41–44 பெண்களும் உளவியலும்

'ஆண்பாதி பெண்பாதி அதில் ஒன்று நீங்கினால் வேதனை பாதி' என்பது போன்ற யதார்த்த உளரீதியான குறைகளைக் களைய...

48 – மாற்கு

அட்டைப்பட நாயகன் பற்றிய குறிப்புகள்......

---

ஆசிரியர்: யாதுமூரான்


தனிப்பிரதி: 15-00

ஆண்டுச் சந்தா: 65-00

அடுத்த இதழ்: 1994 வைகாசி

பக்கங்கள்: 48

தொடர்பு:
மாற்றம் பணிமனை
புதிய செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.



## அமரர் க. சி. குலரத்தினம் ஐயா

### வழங்கிய

# ஆசியுரை

மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறாய் வந்துதோன்றி மறைவன சில. நிரந்தரமாக நிலைப்பவை சில. காலப்போக்கில் மாற்றங்கள் கட்டாயமாக உண்டாதல்வேண்டும். தடுப்புக்களால் நிலைமை தேங்கிநின்று கேடு விளைவிக்கும். சென்ற காலத்தவை எல்லாம் நல்லன அல்ல. பிற்காலத்தில் உண்டானவை எல்லாம் கேடானவை அல்ல. முற்போக்கிலும் முரண்பாடுகள் உண்டு. பிற்போக்கிலும் பிழைகள் உண்டு. நற்போக்கில் அமைவன நன்மை பயப்பதோடு என்றும் சிரஞ்சீவியாய் நிற்பன. பள்ளிக்கூடப் புத்தகங்களிலும் படிப்பகங்களின் குறிப்புகளிலும் படித்தறியாதவற்றை, செய்தித் தாள்கள் சீராக சொல்லும். மாற்றம் கட்டாயம் வேண்டியது. இதுவரை எவரும் இடாத நல்ல பெயர். இதனால் நல்ல மாற்றம் உண்டாதல் வேண்டும், தனியொருவனும் குடும்பமும் சமூகமும் மாறியமைதல் வேண்டும். மாற்றம் என்னும் சஞ்சிகை மிக விரைவில் மாத வெளியீடாகி மலர்தல் வேண்டும். மாற்றத்தை மலர வைப்பவர்களின் சிந்தனை தூயதாயிருத்தல் வேண்டும். இதனை இதனால் நான் இன்னதைச் சாதிப்பேன் என்னும் தெளிவும் திடசங்கற்பமும் வேண்டும். செயலுக்கு நோக்கம் பிரதானம். நோக்கம் நல்லதாயின் பொதுமக்கள் அபிமானமும் ஆதரவும் அதிகரிக்கும்.

மாற்றத்தால் பிள்ளைகள் மனிதராக மாறி உருவாதல் வேண்டும். இன்று மனிதன் மனிதனைக் காணமுடியாமல் தேடித் திரிகிறான். தெருவெல்லாம் மனிதர் உலாவருதல்வேண்டும். உங்கள் மாற்றம் என்னும் வெளியீடு மலர்ந்து மணம் பரவட்டும் அதுவளரட்டும்; வாழட்டும், உங்கள்முயற்சியைப் பாராட்டி உங்களை வாழ்த்தி மலராய் பிறகும் மதலையை வரவேற்கிறேன். அதன் மதலைக் குரலை கேட்போமாக.

அன்பாதரவுள்ள தாத்தா

23-10-1992

க. சி. குலரத்தினம்

> “நீதிமன்றங்களாலோ, தண்டனைகளாலோ பிரச்சினைகளை மேலோட்டமாகத் தீர்க்கலாமே தவிர அதனால் ஏற்பட்ட வடுக்களை ஒருபோதும் தீர்க்க முடியாது”.

# பிரச்சினைகளும் தீர்வுகளும்

பிரச்சினை என்பது எமது உடன்பிறப்பு. எமக்கு எது இல்லாவிட்டாலும் பிரச்சினைகள் இல்லாத நாள் இல்லை, இல்லவே இல்லை. ஒட்டுண்ணிபோல் எப்படியோ பிரச்சினைகள் எம்மோடு சேர்ந்து கொண்டு எமது ஆற்றலின் சாரத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன. வாழ்வின் அமைதியான போக்கினை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மாற்றுவதில் பிரச்சினைகள் தமது அளப்பரிய பங்கினைச் செலுத்துகின்றன. அதாவது ‘மாற்றம்’ ஏற்படுத்தும் ஒரு காரணியாகவே பிரச்சினை உள்ளது. பிரச்சினை ஒன்றினால் வாழ்க்கை நெறி தவறிப் போகாமல் இருக்க; அப்பிரச்சினையைச் சமாளித்துக் கடந்து இயல்பாகவே வழிநடக்கும் திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் பற்றியே இக் கட்டுரை எடுத்துக்கூறும்.



“அக்கரைச்சக்தி”

பிரச்சினை ஒன்றை நாம் சந்திக்கும்போது தடுமாற்றம், பயம், கோபம், பதற்றம் போன்ற உணர்ச்சிகள் எழுவதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் கண்டிருப்போம். மனிதன் நாகரீகத்தில் எவ்வளவோ முன்னேறி விட்டான் எனக் கூறப்பட்டிருந்தாலும் அவனுக்கு இன்னும் உடல், உளரீதியான பிரச்சினைகள் இருந்துகொண்டேயிருக்கின்றன. பசி, தாகம், நோய், பாதுகாப்பு என்பவை உடல்ரீதியான பிரச்சினைகளுக்குக் காரணமாகின்றன. இவைகளைச் சமாளிப்பதில் உலகில் வாழும் அரைப்பங்

கினர் வெற்றிகண்டிருந்தபோதும் ஏனையோருக்கு இவைகள் பிரச்சினைகளாகவே இருக்கின்றன. இப்பிரச்சினைகளைப் பூண்டோடு இல்லாமற் செய்ய எவராலும் எக்காலத்திலும் முடியாது. உடம்பு நிரந்தரமான ஒன்றல்ல. அது தொடர்ச்சியாக மாற்றத்திற்கு உட்படும் ஒரு வஸ்துவாக உள்ளமையால் இப்பிரச்சினைகள் எவ்வாறோ இருந்தே தீரும். விஞ்ஞானத்தின் அளப்பரிய முன்னேற்றம் உடல் ரீதியான பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து தீர்வுகள் கண்டுள்ளபோதிலும் அத்தீர்வுகளால் நிரந்தரமாக அப்பிரச்சினையைத் தீர்த்துவிட இயலாமல்தான் உள்ளது. உளரீதியான பிரச்சினையோ அதைவிட ஆழமாகவும், நீளமாகவும் உள்ளது. மனோதத்துவ நிபுணர்கள், உளரீதியான பிரச்சினைகளுக்கு எவ்வாறு பரிகாரம் காணலாம் என்பதையே தங்கள் பிரச்சினையாகக்கொண்டு ஆராய்கிறார்கள். அந்த ஆராய்ச்சி முடிவின்றித் தொடர்கதையாகவே போய்க்கொண்டிருக்கின்றது. 'உள்ளம்' என்பது ஆழம் கண்டுபிடிக்க முடியாத ஒரு நுண்பொருள் என்பதனால்தான் முடிவில்லாத ஒரு ஆராய்ச்சியாக உளவியல் உள்ளது. உள்ளத்தில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே சமயங்கள், தத்துவங்கள், கோட்பாடுகள் என்பன முயன்று வருகின்றன. இந்த முயற்சி மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை இடையீடின்றித் தொடர்ந்துகொண்டே வருகின்றது. ஆனால் 'ஒன்றைநீக்கின் அது ஒழிந்திட்டினொன்றாம்' என்பதுபோல புதிய புதிய பிரச்சினைகள் தோன்றி உள்ளத்தைக் குடைந்து வாட்டி எடுக்கின்றன. சோதிடம், மாந்திரீகம், அருள்வாக்குக் கேட்டல் என்பவை மூலமும் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் துடிப்பதைக் காணலாம். ஆனால் அவற்றினால் பரிகாரம் தற்காலிகமானதே. பிரச்சினைகள் சிரஞ்சீவியாகவே உள்ளமையால் பிரச்சினைகளை வைத்தே பணம் சேர்ப்போர் எங்கும் உள்ளனர். பிரச்சினை உள்ளவர்கள் அநேக

> ''தனியொருவர் பிரச்சனை, தனியொருவருக்காகத் தனியொருவராலேயே தீர்க்கப்படவேண்டியதாகுமேயன்றிப் பிறரால் தீர்க்கப்படவேண்டியதொன்றன்று. பிறர் கண்கொண்டு தமது பிரச்சினையைத்தீர்க்கமுனைவர். தமது பிரச்சினையைத் தாமே பாரார். ஆதலால் அவரால் அவர் பிரச்சினை தீர்த்தற்கரியதாம்.
>
> உலக தத்துவப் பேராசிரியர்
> ஜே. கிருஷ்ணமூர்த்தி

ராக எப்போதும் இருந்து தங்கள் பணப் பெட்டியை நிரப்பிக் கொள்ள வழிசெய்யவேண்டும் என்பதே அவர்களுக்குள்ள பிரச்சினையாகும்.

ஒரு காலத்தில் சில முனிவர்கள், ரிஷிகள் என்போர், தங்களுக்கு உலகமக்களின் பல்வேறு பிரச்சினைகள் தடையாக உள்ளன எனக் கருதிக்கொண்டு அவர்களின் தொடர்பினை அறுத்துக் கொண்டு காடுகளிலும், மலைக் குகைகளிலும் சென்று தங்கித்தனியாக வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இப்போதும்கூடச் சிலர் இவ்வாறு இருப்பதாக அறியப் படுகிறது. எனினும் இது ஒரு வகைச் சுயநலமான போக்கேயாகும். மக்களின் பிரச்சினையை மக்கள் நடுவில் இருந்து தீர்க்க வல்ல மா தவயோகிகளே - மாமனிதர்களே எமக்கு இன்று தேவைப் படுகிறது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதன் மூலவேர் எதுவரை ஓடியிருக்கிறது என்பதை அறிய வேண்டியது அவசியம். அதைச் சரியாக அறிய முடியுமானால் மாத்திரமே தீர்வுக்கு ஒரு வழி காணலாம். மூலவேரை விட்டுப் பக்கவேர்களை மட்டும் கண்டு விட்டு பிரச்சினையைத் தீர்க்கப் புறப்பட்டால் இருக்கிற பிரச்சினையை இன்னும் பெருப்பித்து விட்டுச் சிக்கலாக்குவதே அதன் பலனாக இருக்கும்.

பிரச்சினை ஏற்படுவதற்குச் சாதாரணமாக பிறரையே குற்றம் சாட்டுதல் இயல்பாக உள்ளது. நவீன உளவியல் ஆராய்ச்சியானது, பிரச்சினைகள் பிறரால் விளைவது இல்லை. தன்னால் தனக்கு ஏற்படுத்திக் கொள்ளப் படுகிறது என்றே கண்டுபிடித்திருக்கிறது. இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களை அறிந்தோ, அறியாமலோ பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்வதால் அவைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து சமூகப் பிரச்சினையாக, இனப் பிரச்சினையாக நாட்டுப் பிரச்சினையாக தேசப் பிரச்சினையாக ஏன் உலகப் பிரச்சினையாகவே பரிணமித்துவிடுகின்றன. இதைப் புரிந்து கொள்வது இலகுவானது அல்ல. எனினும் எல்லா உண்மைகளையும் புரிந்துகொள்வது கடினமாக இருப்பது போலவே இதுவும் -என்பது உண்மையாகும்.

ஒருவருடைய தனிவாழ்க்கையிலோ, குடும்ப வாழ்க்கையிலோ பிரச்சினை ஏற்படும் பொழுது ஒரு போதும் மனங்குழம்பி விடக் கூடாது குழப்பமில்லாத, அமைதியான, நடுநிலை உணர்வுகொண்ட மனத்தினாற்றான் பிரச்சினை ஒன்றின் ஆழ அகலத்தையும், ஆணிவேரையும் கண்டுபிடிக்கமுடியும். ஒவ்வொரு செயலையும் செய்யும்போது அச்செயலை ஏன் செய்கின்றோம் என்று சிந்தித்துச் செய்ய வேண்டும். நாம் செய்யும் செயலின் பின்விளைவுகள் எவை - அதனால் ஏற்படும் பிரச்சினைகள் எவை என்ற விழிப்புணர்வோடு நிதானமாக செயலில் இறங்கவேண்டும். தன்னம்

பிக்கையையும் துணிவையும், தைரியத்தையும் மனதில் வளர்த்துக்கொண்டாற்றான் பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை எதிர்கொண்டு சமாளிக்கமுடியும். பிரச்சினையைக் கண்டு ஓடி ஒதுங்குவதோ நடுங்குவதோ ஆகாது. உணர்ச்சிக்கு மட்டுமே அடிமைப்பட்டு அறிவுக்கு இடங்கொடாதவருக்குப் பிரச்சினையின் உட்சொருபத்தைக் காணமுடியாமல் போகும்.

ஒவ்வொருவருக்கும் உள்ள பிரச்சினையானது அவரவரின் குடும்பப் பின்னணி, சூழல், பிரச்சினை ஏற்பட்ட காலம், இடம், அவரின் மனப்பாங்கு என்பவற்றில் பெரிதும் தங்கியுள்ளது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் பிரச்சினையின் பரிமாணம் வெவ்வேறு அளவினதாயிருக்கும். அதனாற்றான் ஒருவரின் பிரச்சினையை வேறு ஒருவர் முற்றிலும் தீர்த்துவைக்க முடியாதுள்ளது. விவேகமும், புத்திபூர்வமான தெளிவான சரியான அணுகுமுறையையும் தன் எல்லாச் செயல்களிலும் கடைப்பிடிக்கும் ஒருவருக்கே பிரச்சினையைத் திறமையாக எதிர்கொண்டு வெற்றி கொள்ளும் திறனிருக்கும்.

பிரச்சினைகளைத் தங்களுக்குள் தீர்த்து உடன்பாடு காண முடியாதவர்கள் நவீன சட்டங்களின் அடிப்படையில் அமைந்த நீதிமன்றங்களை நாடி வழக்காடி ஏதோ ஒரு வகையில் தீர்த்துக் கொள்வது வழமையாயினும், இரு தரப்பினரும் பெரும்பாலும் மீண்டும் ஒன்றுசேர்ந்து முன்போல் இணக்கமாய் வாழமுடியாதபடியே தீர்ப்புக்கள் அமைந்துவிடுகின்றன. பிரச்சினை ஏற்பட்டபோது இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட மனக்கசப்பு அழியாமல் அப்படியே இருந்துவிடுகிறது. இதனால் எவ்வளவு சரியான நீதிமன்றத் தீர்ப்பே ஆயினும் அதனால் பிரச்சினை முற்றாகத் தீர்ந்துவிட்ட மன அமைதி கிடைப்பதில்லை. எனவே நீதிமன்றங்களாலோ, தண்டனைகளாலோ பிரச்சினைகளை மேலோட்டமாகத் தீர்க்கலாமே தவிர அதனால் ஏற்பட்ட வடுக்களை ஒரு போதும் தீர்க்க முடியாது. அன்பு, கருணை, இரக்கம், மனிதாபிமானம், பரஸ்பரம் விட்டுக்கொடுத்தல் ஆதியாம் மேலான பண்புகளைக் கடைப்பிடித்து நடப்பவர்க்குப் பிரச்சினைகள் வந்தாலும் அவை அவர்களது மனத்தின் நடுநிலையைப் பாதிக்கும் அளவுக்கு வலிமையுடையனவாய் இருக்காது. அவர்கள் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினையையே படிக்கல்லாகக் கொண்டு முன்னேறி வெற்றிகரமான தீர்வினை எட்டிவிடுவார்கள்.

# அழியாதவள்

அமுதான தமிழ் எங்கள்
உயிரானவள் - நெஞ்சில்
அரங்கேறி நடமாடும்
கவியானவள்
கடல் உண்ட போதிலும்
கலங்காதவள் - அன்பு
கருணையே நிறை வாழ்வாய்க்
கொண்டானவள்.

முடி கொண்ட மன்னர்க்கும்
முதலானவள் - சங்க
மடிமீது தவழ்ந்தாடி
மலரானவள்
டடி மம்மிப் படைகண்டும்
இடியாதவள் - வஞ்சப்
பொடி நோனா போர்வைக்குள்
புதையாதவள்

இமயத்தின் கொடி ஏற்றி
உலகாண்டவள் - கவி
இதயத்துள் குடி ஏறி
எழில்பூண்டவள்
மலைபோலும் வீரத்தில்
நிகரானவள் - பண்டா
மகே அம்மே என்போரால்
மடியாதவள்



நெடுந்தீவு லக்ஸ்மன்




● இன்று மனிதர்களே குரைக்கிறார்கள், கடிக்கிறார்கள். ஆனால் டிங்கோ எனும் ஒரு வகை நாய்க்குக் குரைக்கத் தெரியாதாம்.

● ஐ. நாவில் நீண்ட நேரம் பேசி சாதனை ஏற்படுத்திய பெருமைக்குரிய தமிழர் வி. கே. கிருஷ்ணமேனம்.

● தமிழக அரசு சின்னமாக இன்று இருப்பது ஸ்ரீவல்லிபுத்தூர் கோயிற் கோபுரமாகும்.

● மொத்தம் 810 சொற்கள் ஜப்பானிய மொழியிலும் தமிழ் மொழியிலும் ஒரே மாதிரி ஒரே சொல்லாய் உள்ளன.

● இறந்த மனிதனின் உடலில் இருந்து முடி முளைக்கிறது என்று மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

● பழந்தமிழ் நாட்டில் நீரைப் பயன்படுத்தி நாழிகையைக் கணக்கிடும் 'நாழிகை வட்டில்' என்ற கருவி இருந்திருக்கிறது. இலக்கியங்கள் இது பற்றிக் குறிப்பிடுகின்றன. இதைக் கண்டு கூறுபவர்கள் நாழிகைக் கணக்கர் எனப்பட்டனர்.

● சென்னையில் வெளியிடப்பட்ட முதல் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மாகசின் என்பது. 1831 இல் கிறிஸ்தவ மதச் சங்கம் வெளியிட்டது. முதல் தமிழ் வார இதழான தினவர்த்தனி 1856 இல் வெளிவந்தது. ஜனவிநோதினி என்ற மாத இதழை கல்வி இலாகா 1870 இல் தொடங்கியது. முதல் தமிழ் தினசரியான சுதேச மித்திரன் 1882 இல் தொடங்கப்பட்டது.

● திருவையாறுக்கு அருகிலுள்ள திங்களூரில் பங்குனி உத்தரத்தன்று சந்திர ஒளி சிவலிங்கத்தின் மீது படும்படியாகக் கோயில் கட்டப்பட்டுள்ளது.

● உலகிலேயே அதிகமான மசூதிகள் துருக்கி நாட்டின் தலைநகரமான இஸ்தான்புல்லில் உள்ளன. அங்கு மொத்தம் 444 மசூதிகள் உள்ளன.

● 'பென்சில்லம்' என்னும் லத்தீன் வார்த்தையின் மருஊ தான் 'பென்சில்' என்பதாகும்.



காகிதக் கப்பல் பெருஞ் சமுத்திரம் கடத்தல் மாற்றம்

# புதிய கலாசாரங்கள்



துணவியூர் கேசவன்

மதிய வேளை, வீதிகளின் சந்தடி சற்றே தணிந்திருந்தது. பல களைத்த முகங்கள், அவற்றிற்குரிய மனிதர்கள் வலிந்து தமது 'மிதிவண்டிகளை' மிதித்தார்கள். இடையிடையே சென்றுகொண்டிருந்த மோட்டார் வாகனங்கள் சூழல் மாசிற்கு தமது அதீத பங்களிப்பைச் செய்து கொண்டிருந்தன. தார்றோட் என்ற பெயரில் குன்றும் குழியுமாயிருந்த அந்த வீதியால் நானும் எனது வண்டியை மிதித்துக் கொண்டிருக்கிறேன்.

கடந்த மாதங்களில் பெய்த கடும் மழைக்கு ஈடாக வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. காலையில் வயிற்றுக்குள் போட்டுக்கொண்ட 'காறாத்தல் பாண்' காலியாகியிருந்ததால் வயிறும் தொந்தரவு செய்யத் தொடங்கியிருந்தது. மனத்தை அழுத்திக்கொண்டிருக்கும் பாரம் இறங்கிக் கொள்வதற்காய் மனம் சுமைதாங்கி ஒன்றை தேடிக்கொண்டிருந்தது. கால்கள் விருப்பமில்லாமலே மிதித்துக்கொண்டிருந்தன. 'சைக்கிளோ அழுதபடியே பயணித்துக் கொண்டிருந்தது; ...கிறீச்...... கிறீச்......

ஒரு வாரகாலமாக என்ர மூன்றாவது மகனுக்கு திறம் பள்ளிக்கூடமொன்றில 'அட்மிசன்' எடுக்க வேணுமெண்டு ஓடித் திரியிறன். ஆனா பிரயோசனம்மில்லைப் போலத்தான் கிடக்கு. 'என்ரபொடி' பாவம் ஸ்கொலஷிப் பாஸ் பண்ணியும்......!


இந்தக்காலத்தில ஸ்கொலஷிப் எண்டாப்போல இலேசுப்பட்ட விஷயமே அதற்கும் எத்தனை 'டியூஷன்கள்' எத்தனை 'சிவராத்திரி'யான இரவுகள். பாவம், அவன் பட்டபாடு எனக்கும், மனிசிக்கும்தான் தெரியும். இவன் மட்டும் அல்ல எல்லாப் பிள்ளையளும இப்படித்தான் சோதனை பாஸ் பண்ணுதுகள்.

பத்து வயதில, பன்னிரண்டு மணிவரையும் கண் விழித்துப் படித்து, விடியக்காலத்தால எழும்பி 'புத்தகம் கொப்பியோட' மாயிற புதிய கலாசாரங்களைத் தான் அதுகள் விரும்பியோ விரும்பாமலோ பின்பற்ற வேண்டியிருக்குது. துள்ளித்திரிந்து ஓடி விளையாடுகிற இனிய மாலை வேளையில எங்கட பிள்ளையள் 'டியூசனுக்கு' ஓடுதுகள். விளையாட்டிவ போட்டி போடுறதுக்குப் பதிலா கல்வியில போட்டிபோடுதுகள். இண்டைக்கு இந்த நாட்டில வாழ்க்கையே போட்டியாகிப் போனதால, பல வேளைகளில் எங்கள் மத்தியில்மானுடம் தோத்துப் போகுது.

சரிதான், எப்படியோ 'என்ர பொடி' சோதனை 'பாஸ்' பண்ணீட்டுது. ஆனா – அவனுக்கு அரசாங்கம் கொடுக்கிற உதவித் தொகை கிடைக்கப் போறதில்லை ஏனென்டா நானொரு 'கவுண்மென்ற் சேவன்ற்' எங்கயோ ஒரு 'சேவன்ற்' தான். மாத வரும்படி இரண்டாயிரத்து முந்நூறு. ஆனா – உவர் 'சிவத்தாற்ற பொடிக்கு' உதவித் தொகை கிடைக்கும்...... அவரென்ன ஒரு வியாபாரிதானே; மாத வரும்படி ஐயாயிரத்திற்கு குறையாது;

அதுதான் போகட்டும், அவன் பட்ட கஷ்டத்திற்கு ஒரு 'திறம்' பள்ளிக்கூடத்தில எண்டாலும் சேர்த்து விடுவமெண்டால்......! அவனொரு கெட்டிக்காரப் பொடியன், நல்லதொரு இடத்தில சேர்த்து விட்டால் நல்லா வந்திடுவான் என்ற எண்ணத்திலதான் இந்த முயற்சியல நான் கால்வைச்சன். அட்மிஷனுக்கு பிரச்சினை இல்லை. ஆனா – 'அபிவிருத்தி நிதி'க்கு நான் எங்க போக...! ஐயாயிரம், நாலாயிரம், மூவாயிரம்......... என அந்த அரசாங்கப்

---



## சிந்தனைச்சொல் அகராதி

சூரியன் : உலகை இயக்கும் உத்தமன்
நாய் : கூலியில்லாச் சேவகன்
வானவில்: ஆகாயத்து அழகுதேவதை
பிளேன் : கோள்மூட்டி
மழை : இந்திரனின்சிறுநீர்
பூனை : எலியின் எமன்
இ. போ. ச : இதில் போனால் சங்கடம்
உலங்குவானூர்தி: சடசடக்கும் சண்டாளன்
மகுடி : செவிடன் காதில் சங்கோசை

— நிலாமகள்



சூத்திரன் பூநூல் தரித்தால் மாற்றம்

பாடசாலைகளின் 'தரத்திற்கு'... 'திறத்திற்கு' ஏற்றாற்போல 'ரேட்' வேறுபடும் புதிய கலாசாரம் மேடையேறும்போது என் போன்ற பெற்றோர்கள் என்ன செய்யலாம்?


பிள்ளையளைப் படிப்பிக்கிறதெண்டா சும்மாவே, கொப்பிக்கும், பேனைக்கும், 'டியூசனுக்கும்' இன்னும் உடுபுடைவைக்குமெண்டு காசு, காசா இறைக்கிறம், அதோட பள்ளிக்கூடங்களுக்கும் 'அபிவிருத்தி நிதியெண்டு' ஆயிரக்கணக்கில கொடுக்கிறதெண்டா 'இலவசக் கல்வி'யின்ரை அர்த்தமென்ன?

வேதனைகள் மனத்தைச் சிறையிட, கஷ்டப்பட்டுப் பெற்ற வெற்றியில் திளைத்திருந்த என் மகனின் முகம் ஏமாற்றத்தில் சிதைந்து போகும் நினைவு என் மனத்தில் திரையிட, என் ஆற்றாமை இதயத்தை கசக்கிப் பிழிவதாய் உணர, எங்கோ, எதிலோ ஏற்பட்ட ஆத்திரம் உடலை படபடக்க வைக்க 'சைக்கிள்' தன் பாதையில் நகர்கிறது.

தெருவோரத்து 'ரீக்கடை, யொன்றில் ஒலிபரப்பாகிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியறிக்கை என் செவிப்பறையில் முட்டி எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது. 'எம் நாட்டில் நடைமுறையில் உள்ள இலவசக் கல்வித் திட்டத்தை அபிவிருத்திசெய்ய கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார், ஏழைகளும் கல்வியின் உச்சப்பயனைப் பெறவேண்டும் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்......!'

(யாவும் கற்பனையல்ல)

---



## காந்தி

காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட போது அனுதாபம் தெரிவிக்காத ஒரே நாடு ரஷியாதான். காந்தியின் சத்தியாக்கிரகக் கொள்கையைப் பிடிக்காத ஜோசப் ஸ்டாலின் அப்போது ரஷிய அதிபராக இருந்தார்.

# கடல்களைப் பற்றி தெரிந்துகொள்வோம்

- உலகத்திலுள்ள கடல் நீரின் பரப்பளவு = 961 மில்லியன் சதுர கிலோ மீற்றர்

- மொத்த கடல்நீரின் கனஅளவு = 1370 மில்லியன் கனகிலோ மீற்றர். இது புவியின் கனஅளவில் $^{1}/_{800}$ பங்கு ஆகும்.

- கடல் நீரிலுள்ள உப்புக்களின் வீதம் 3·5% நீர் 96.5%

- உலகக் கடல்களில் உள்ள உப்புகளின் அளவு 4·9 கோடி கனகிலோ மீற்றர். இவ்வுப்பைக்கொண்டு 275 கிலோமீற்றர் உயரமும் 2 கிலோமீற்றர் பருமனும் கொண்ட பெரும் சுவரொன்றைப் புவிக் கோளத்தைச் சுற்றிக் கட்டிவிடலாம் அல்லது 200 மீற்றர் பருமனுள்ள கனத்த உறை ஒன்றைச் செய்து மூடிவிடலாம்.

- **மரணக் கடல்**

இப்பெயர் கிரேக்கரால் சூட்டப்பட்டது. இக்கடலில் உப்பு 24% உண்டு. சுமார் 530 சதுர கிலோ மீற்றர் பரப்பில் உள்ள இக்கடலில் 20 இலட்சம் தொன் பொட்டாஸ், மற்றும் 116000 கோடி தொன் உப்பு உள்ளதாக மதிப்பிடப்படுகிறது. பல லட்சம் ஆண்டுகளுக்குமுன் இப்போதுள்ளதைவிட 420 மீற்றர் உயரத்தில் இருந்தபோது இதில் உயிரினங்கள் வாழ்ந்தன பின்னர் படிப்படியாகச் சுருங்கிப் பள்ளத்தில் இறங்கிவிட்டது. இதன் நீரில் மகனீசியங் குளோரைட் அதிகம் உண்டாகையால் அந்த நீரில் ஒருதுளி வாயில் பட்டாலே சகிக்கமுடியாத நாற்றமும் அருவருப்பும் தோன்றி ஏதோ ஒரு நோய் பற்றிக் கொண்டது போன்ற உணர்வு ஏற்படும். அதில் கல்சியம் குளோரைட் அதிகம் உள்ளதால் எண்ணெய்போல் பளபளப்பாகவும் மென்மையாகவும் இருக்கிறது. இக்கடலில் எவ்வித உயிரினங்களும் இல்லை. இருந்தாலும் வாழமுடியாது. ஜோர்தான் நதி இக்கடலில் கலக்கும்போது அந்நீரில் உள்ள மீன்களும் பிற உயிரினங்களும் கூட இறந்துவிடுகின்றன. இதனாற்றான் இதற்கு மரணக்கடல் என்று பெயர். ஜோர்தானுக்கும், இஸ்ரேலுக்கும் நடுவில் உள்ள ஒரு உள்நாட்டுக்கடல் இது. 80 கிலோ மீற்றர் நீளமும், 18 கிலோ மீற்றர் அகலமும் உள்ள இக்கடல், கடல்மட்டத்திற்குக் கீழே 400 மீற்றர் ஆழத்தில் உள்ளது. இக்கடலில் மனிதர் உட்பட எப்பொருளும் மூழ்காது மிதக்கும்.

# இருட்டில் இருக்கும் நூதனப் பொருட்கள்


எனது கடிகாரம் மூன்று மணி எனக் குரல் கொடுத்தது. நாம் கட்டடத்தினுள் நுழைந்தோம். வெடித்த பருத்தி நிறத்தில் முடிகளைக்கொண்ட ஒருவர் விஷ்ணுவைப்போல் தலைக்கு ஒரு கையைக் கொடுத்தபடி சயனத்தில் இருந்தார்.

வரலாற்று சிறப்புமிக்க நல்லைநகரிலே ஆறுமுகநாவலரது வீடு இருந்த காணியிலே இந்துக் கட்டடக் கலையையும், மேல்நாட்டுக் கட்டடக் கலையையும் கலந்து கட்டி பால்வர்ணமடித்து நிமிர்ந்து நிற்கின்றது நாவலர் கலாசார மண்டபம். கீழ்ப்புறத்தில் சதுரக் கம்பி வலைக்குள்ளே நல்லைக் கந்தன் கோயிலுக்கு அருகில் இருந்து இரவோடு இரவாக பெயர்க்கப்பட்ட நாவலரது கரிய உலோகச்சிலை பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. மேல்மாடத்தில் மாநகர சபையின் கிளை நூலகம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. அருகிலே அடர்த்தியாக வளர்ந்திருந்த மாமரம் சூரியனது பார்வையில் தடுத்துக்கொண்டிருக்க தென்றலும் உடலைத் தழுவிச் சுகம் கொடுக்க கட்டைக் காற்சட்டை அணிந்த ஊழியர் ஒருவர் குழந்தையைப் போல் சிரித்துக்கொண்டிருந்தார். அருகே இருந்த சைக்கிள் நிற்பாட்டுமிடம் மூன்று சைக்கிள்களை மட்டும் கொண்டிருந்தது.

கலாசார மண்டபத்தின் கோடிப் புறத்திலே நாவலர் வாழ்ந்த வீட்டின் பாசிபிடித்துப் பச்சையான பழைய சுண்ணாம்புச் சுவர் தெரிந்தது. அப்பால் அநாதரவாகக் கைவிடப்பட்ட குருத்துப்பச்சை நிறக் காருக்கு குருவிகளும் காகங்களும் தமது எச்சங்களால் சித்திர

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY






● தர்ஷிகன்

வேலைப்பாடுகள் செய்திருந்தன. அதற்கு இளவயதுடைய வேப்ப மரம் ஒன்று குடைபிடிக்க அலரி மரமொன்று சாமரம் வீசிக்கொண்டிருந்தது. மறுபுறத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட திமிங்கலத்தின் எலும்புத்துண்டுகள் மலைபோல குவிந்திருக்க, அவற்றிற்கு முன்னால் பழையகாலத்து ஓடுகளால் வேய்ந்த பதிவான கட்டடம் கழுவாத முகம்போல் பொலிவிழந்து இருந்தது. கட்டடத்தின் வாயிலுக்கு அண்மையில் மும்மொழிகளாலும் எழுதப்பட்டிருந்த தகரத்தில் 'நூதனசாலை' என்று அரைகுறையாகத் தெரிந்தது.

எனது கடிகாரம் மூன்று மணி எனக் குரல் கொடுத்தது. நாம் கட்டடத்தினுள் நுழைந்தோம். வெடித்த பருத்தி நிறத்தில் முடிகளைக் கொண்ட ஒருவர் விஷ்ணுவைப்போல் தலைக்கு ஒரு கையைக் கொடுத்தபடி சயனத்தில் இருந்தார். அவரில் குற்றமில்லை; அமைதியான சந்தடியற்ற இடத்தில் தூக்கம் வருவது இயல்பே. எமது குரல் கேட்டு விழித்துப் பார்த்தார். நாம் அரும் பொருட்களைப் பார்ப்பதற்கு அனுமதி கேட்க, எமக்கு அனுமதியும் தந்து, தானும் எழுந்து பின்னே வந்தார்.

அவரது பெயர் சோமசுந்தரம். பதினைந்து ஊழியர்கள் வேலை செய்யும் நூதனசாலையில் அவ்வேளை கடமையிலிருந்த ஒரே மனிதர் அவர்தான்.

ஏனைய ஊழியர்களைப்பற்றி நாம் கேட்டபோது வேறு விடயங்களைக் கூறி சமாளித்தார்.

பஞ்சு மேகங்களை விலத்தி விட்டு பூமியை சூரியன் அனல்க் கண்ணுடன் பார்த்துக்கொண்டிருக்க, அவனுக்கு பயந்த இருட் கூட்டம் கட்டடததினுள் ஒளிந்திருந்தது. யாருடைய கையும் படாமல் தூசி படிந்து மங்கிப் போன கண்ணாடித் துண்டங்களினால் பூட்டப்பட்டிருந்த பொருட்கள் இளைஞர்களாகிய எமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அப்பெட்டிகளில் கார் இருள் கூட்டத்தையும் வைத்துப் பூட்டி இருந்தார்கள். கண்ணாடிகளில் ஒட்டப்பட்டிருந்த சில கடதாசிகளில் பொருட்களது பெயர்கள் தெளிவற்ற நிலையில் இருந்தன. அதுவும் அவற்றில் பொருட்கள் பற்றிய தெளிவான விபரமோ வரலாறோ எதுவும்

> 1983 ம் ஆண்டிலிருந்து நிலையான கட்டடத்தில் உள்ள நூதனசாலை இருட்டறைகளில் இருந்து காலத்தை கழிப்பதை இதுவரை எந்தவொரு பொது நலன் பேணும் அமைப்போ, சமூக நிறுவனமோ கடைக்கண்ணால் ஆயினும் பாராமலிருப்பது எமது துரதிஷ்ட வசமே.

இல்லை. அவற்றைப்பற்றிக் கூறும் நிலையிலும் ஊழியர் இல்லை. இதனால் நடுச்சாமத்தில் மரத்தடி தெரிவதுபோல பொருட்கள் தெரிய எமக்குத் தெரிந்த வரலாறுகளையும் உருவ எண்ணக் கருத்துக்களையும் மனத்திலே எண்ணியபடி பொருட்களைப் பார்க்கலானோம், இருளாக இருந்ததனால் தென்றல் பெண்கூட கட்டடத்தினுள் நுழைய மறுத்து விட்டாள் போலும்.

கல்லிலே பொழிந்த தீர்த்தத் தொட்டி, கணபதி, இலக்குமி, ஐயனார் போன்ற திருவுருவங்களும் மரத்திலே செதுக்கிய எருது குதிரை, யானை, வாகனங்கள், தந்தத்தால் செய்யப்பட்ட புத்தர் சிலைகள், சித்திர வேலைப்பாடுடைய பாக்குவெட்டிகள், அழகிய வலம்புரி, இடம்புரிச் சங்குகள், சீனர்கள் பாவித்த மட்பாண்டங்கள், நல்லூர் மாப்பாண முதலியார் பாவித்த பல்லக்கு, மத்திய கால புராதன உலோக நாணயங்கள், யாழ்ப்பாணத்திலிருந்து மேலைநாட்டவர் வெளியிட்ட நாணயங்கள், பனைமரத்திலான பொருட்கள், மரச்சிற்பங்கள் உட்பட பல்வேறுபட்ட பொருட்கள் எமக்கு மங்கலாகத் தெரிந்தன.

இரண்டு அறைகள் பூட்டப்பட்டிருந்தன. அதைப்பற்றி விசாரித்தபோது திறப்பு வைத்திருக்கும் ஊழியர் காலையில்தான் திறப்ப வராம்; 'காலையில் வாருங்கள்' என சோமசுந்தரம் கூறினார்.

நாங்கள் நூதன சாலையை விட்டு வெளியேறவும் நல்லூர்க் கந்தன் நான்கு மணிப் பூசைக்கு மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

* * *

மறுநாள் காலைச் சூரியன் பூமிக்கு வெப்பம் ஏற்றிக்கொண்டிருந்தது. நேரம் பத்து மணி. நாம் நூதனசாலைக்குள் சென்றோம். முதல்நாள் பிற்பகல் இருந்தளவு இருட்டு காணப்பட்டது. ஆனால் சோமசுந்தரத்துடன் நவரத்தினராசா, தேவதாஸ், ராசரத்தினம், கெங்கேஸ்வரன் ஆகியோர் காணப்பட்டனர். அவர்கள் கையெழுத்துப் போடுவதற்காக வந்திருக்கிறார்கள் போலும் என எண்ணியபடி முதல்நாள் பார்த்த பொருட்களை மீண்டும் ஒரு முறை பார்த்துக்கொண்டு வந்தோம். பூட்டியிருந்த அறையைத் திறப்பீர்களா என நாம் கேட்க நவரத்தினராசா தலையசைத்தபடி ஓடிச்சென்று ஒரு அறையைத் திறந்து அதற்குள் இருந்த திறப்புக்களை எடுத்து வந்து மற்றைய அறையைத் திறந்துவிட்டார். நாம் சிலந்தி வலைகளை அறுத்தவாறே இருள் சூழ்ந்த சொற்ப ஒளி தெரிந்த அறைக்குள் நுழைந்தோம். வாசலில் கண்டியில் இருந்து கொண்டுவரப்பட்ட பத்து அடி உயரமுள்ள விக்டோரியா மகாராணியின் ஓவியம் ஒன்று எம்மைப் பார்த்து புன்

ஸைத்தபடி ஒயிலாக நின்று கொண்டிருந்தது.

கம்பளம் விரித்தாற்போல் அறைநிலத்தில் தூசி யாருடைய காலடி அடையாளங்களுமின்றி அழகாக இருந்தது. வெள்ளைப் பட்டு நூல் போன்று சிலந்தி எச்சில் வலைகளாக பின்னப்பட்டிருந்தன. தூசிப் போர்வையினூடாக கண்ணாடிப் பெட்டிக்குள்ளிருந்த அரும்பொருட்கள் தெரிந்தன. அங்கே பிஜித்தீவு மக்கள் பாவித்த மரத்தாலான கதாயுதங்கள் குறியைத் தாக்கிவிட்டு எய்தவன் கையிற்கே திரும்பி வரும் 'பூமராங்' கருவி, போர்த்துக்கேயரதும் சிங்களவர்களது வாள்களும் மட்பாண்டப் பொருட்கள், சங்கிலியன் தோப்பில் இருந்து எடுக்கப்பட்ட செங்கற்கள், ஓடுகள், கந்தரோடையில் இருந்து மீட்கப் பட்டபொருட்கள் என்பன காணப் பட்டன.

கந்தரோடையிலிருந்து மீட்கப்பட்ட புத்த பெருமானது சிலைகளைப் பார்த்துவிட்டு கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த பொருளொன்றைப் பார்த்தோம். அதை நவரத்தினராசா அவர்கள் புத்தரது பாதம் எனக் கூறினார். ஆனால் அதே பொருளை முதல் நாள் சோமசுந்தரம் கல்வெட்டு எனக் கூறினார். நீண்ட நாட்களாக அங்கு கடமையில் இருந்தும் ஊழியர்களுக்கு பொருட்கள் பற்றிய விபர அறிவுதானும் ஏற்படாததையிட்டு மனவருத்தப் பட்டுக்கொண்டு, மண்பானை ஒன்றிலே அவர்கள் குடிப்பதற்கென வைத்திருந்த தண்ணீரை அதற்கு மேலே வைக்கப்பட்டிருந்த காவி படிந்திருந்த அலுமினிய பேணியினால் அள்ளிப் பருகினோம். எனது கடிகாரத்தின் முட்கள் ஒன்றன்மேல் ஒன்று படுத்திருந்தவேளை கட்டடத்தைவிட்டு வெளியே வந்தோம். மேற்குப் பக்கத்தில் பக்கத்து வீட்டுக் கழிவு நீர் தேங்கி நிற்க தாராக்கள் இரண்டு உணவு தேடிக் கொண்டிருந்தன. காகங்கள் குளித்துக் கொண்டிருந்தன. நல்ல வேளையாக பன்றிகள் அங்கு காணப்படவில்லை. அங்கே பராமரிக்கப்படும் குறோட்டன்களை பார்த்தபடி எமது பத்திரிகைக் காரியாலயம் நோக்கி நடக்கலானோம்.



எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணியாராகப் பெறின்

— திருக்குறள் (666)

மாற்றங்கள் மனித குலவரலாற்றில் பல்வேறு பரிமாணங்களில் பரிணமித்துள்ளது.

## சிந்தனை

அம்மாற்றங்களை மனித குலம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டுள்ளது கண்கூடு.

மனிதன் சிந்திக்கும் பிராணி; இந்த சிந்தனை இன்று நேற்றல்ல எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இந்த சிந்தனை நல்லதொரு இலட்சியத்தை நோக்கி திருப்பப்பட வேண்டியுள்ளது.

இதற்கு சமூகமாற்றம் அவசியம்.

சமூகம் என்பது ஒரு அமைப்பு முறையேயாகும். மக்களால் சமூகம் உருவாகிறதே அன்றி சமூகத்தினால் மக்கள் உருவாக்கப்படுவதில்லை. நல்லதொரு மாற்றத்தை மக்கள் வடிவமைத்து சமூகத்தின் கையில் கொடுக்கவேண்டும். சமூக மாற்றங்கள் உருவாக ஒரே வழி அதுதான்.

சிந்தனை சமூக ரீதியாக பின்தள்ளப்பட்டுள்ளது. பலவகை ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள் இதன் காரணம் எனலாம்.

கட்டுப்பாடுகள் ஒழுக்கம் என்ற பெயரிலும் கலாசாரம் என்ற பெயரில் கடப்பாடுகளும் பரிணமிக்கின்றன.

இந்த எண்ணக்கருக்களை எல்லாம் அழிக்க கல்வி என்னும் உயரிய சொத்து அவசியம். கல்வி கற்பிப்போரால் அல்ல; கற்போரால் பெருமை அடைகிறது.

பெருமை, சிறுமைகளையெல்லாம் வென்று சமூகம் மாற்றமடைவதிலேயே உள்ளது.

சமூக மாற்றங்கள் ஓர் அமைதியான தொற்றுநோய்க் கிருமியை மெல்ல அகற்றும் பாணியிலமையலாகாது.

இன்னதை இன்னதால் இப்படி மாற்றியமைக்கவேண்டும் என்ற புரட்சி வழியினால் அமையவேண்டும்.

மாற்றம் சமூகப் புரட்சியே ஆகும்.

சமூகப் புரட்சிக்கு சாலை அமைப்பதே சிந்தனை.

சிந்தனை மாற கல்வி அவசியம்.

கல்வியின் பயனுக்கே இந்த சிந்தனை

● மதுமதன்



குரங்கின் கையில் கொடுத்த பூ மாலை பெறுவது மாற்றம்




## மாற்றத்துக்காய்

மாணவர் மனங்களிலே
மாற்றத்தை ஏற்படுத்த
மாற்றமெனும் பெயர்கொண்டு
மலர்ந்துவிட்ட மாணிக்கமே – நீ
மலர்ந்து ஓராண்டு
மறைந்துவிட்ட போதிலுமே
மறுபடியும் மறுபடியும்
மாதமொன்றாய் நீ மலர்ந்து
மானிடத்தை உயர்த்திட
மனமாற வாழ்த்துகின்றேன்.

பி ஜெஜீஸ்றீயூட்டன்
புனித சாள்ஸ் ம. வி.

மக்கள் மனம் கவரும் மாற்றம் சஞ்சிகையின் விலை மாறி தளம் புவது ஏன்?

த. தவரூபன்
யா. இ. க.

பல வழிகளிலும் முன்னேற்றம் பெற்று எங்கள் இதயங்களில் இடத்தைப் பிடித்துக் கொண்ட 'மாற்றம்' இதழின பணி மேலும் தொடரட்டும்.

குப்பிழானூர் தமிழினி

# பெண்கள்

## சில தகவல்கள்

- ''மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதம் செய்திடல்வேண்டும்'' என்று பாடியவர்.

  சி. வை. தாமோதரம்பிள்ளை ஆவார்.

- அனைத்துலக பெண்கள் தினமாக மார்ச் 08 முதன்முதல் கொண்டாடப்பட்டது ।

  1911ஆம் ஆண்டில் ஆகும்.

- வன்னிப் பிரதேசத்திலே அடக்க முடியாத மத யானையை அடக்கிய வீர வரலாறுக்கு உரித்தான பணிக்கர் குல வனிதை.

  'அரியாத்தை' ஆவார்.

- 1980 இல் 'புரட்சிகர கிறிஸ்தவர்கள்' என்ற இயக்கத்தை தோற்றுவித்து குலாதமாலாவில் செவ்விந்தியருக்காகப் போராடுபவரும், 1992 ஆம் ஆண்டுக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவருமான பெண்மணி :

  'ரிகோபெடாமெஞ்சு' ஆவார். (34 வயது)

தொகுப்பு :
திருமலை ஷாந்தன்

● சின்னப் பூக்களே!

மானிடத்தின் மகத்துவம்
மனிதநேயம் எல்லாம்
மடிந்தாகி விட்டது.
புதிய கரங்களை நீட்டி
பழைய பல்லவிக்கு
பதிலடி கொடுங்கள்.
உங்களால்தான் முடியும்.
மாற்ற......

— சமுத்திரபந்தன்

● வேஷம்

நிமிடத்திற் கொருமுகம்
சிரித்துக் கொண்டு
கனைத்துக் கொள்ளும்
ஆளுக்கொரு வேஷம்.
புரிந்துணர்வற்ற
புதியவகை
முகமூடிகள்.
இவர்களுக்கெல்லாம்
போதும், இந்த யுகம்.
மறுயுகத்திலாவது
மனிதனாக......

— சந்திக்கல்

● தாடி

தாடி என்றேன்
அவள் தரவில்லை.
தானாக வளர்ந்தது
தாடி.

— மேகதூதன்

இளையவர்களே!
இது உங்கள் பக்கம்

வளர்பிறை

● காப்பு?

சுழன்றடித்தது புதியதொரு
சுழல் காற்று
புழுதி மண்டலம்
புறப்பட்டது
கண்மணிக்குள்ளும்
கறுப்புத் துணிக்கைகள்
கண்ணை இமை காப்பது?

ஓ...... இவை எல்லாம்
பழைய தத்துவம்
இமையைக் காக்கவே
இன்னொன்று
புறப்படவேண்டும்.

— சமுத்திரபந்தன்

● வளம்

வழுக்கை யாறு – இது
நிலத்தை ஊட்டுமென்று தேறு
நிலத்தைச் சாறு
கிடைக்கும் சோறு

— ந. பிரியதீபன்

● நிலவே!

சித்திரை முற்றத்து தேன்நிலவே — கன்ன
முத்திரை பதித்திட்ட முழுமதியே
நித்திரை எனக்கிங்கு தாராயோ?
மாத்திரைபோடு நிலை மாறாதோ?

— யாதுமூரான்

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



● புகைப்படக் கலையின் முன்னோடி நட்சத்திரம் யார்?

கு. வரதன், அல்வாய்.

மாணிக்கத்தம்பி நிக்கலஸ்.

● ஆண்கள் பெண்களைத் தீ என்கிறார்களே!

த. சிவரூபன், நெல்லியடி

அதனால்தான் அணைக்கிறார்களோ?

● மாற்றம் வேண்டும் எங்களை எல்லாம் உங்கள் 'மாற்றம்' ஏமாற்றத்தில் விடுகிறதே!

ம. அச்சுதன், கேணியடி.

'A' மாற்றமும் மாற்றந்தான்.

● சுருட்டியாரே! நீர் ஆணா? பெண்ணா? அல்லது அலியா?

ச. சுதர்ஷா, கட்டுடை.

கிளியே! ஏன் இந்தக் கிலி. அலியல்ல நான்.

● யாழ்ப்பாணத்துக் குருமார்களுடைய கஷ்டம் பற்றி ...

இ. கமல், குருநகர்.

யாழ்ப்பாணத்துக் கமலஹாசருக்கு என்ன கஸமா?

● ஓட்டப் பந்தயங்கள் துவங்கும் போது ஏன் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் பயன்படுத்தப்படுகிறது?


வ. ரமணி, உடுவில்.

ஓடாதவன் அந்தச் சத்தத்தைக் கேட்டாவது வேகமாக ஓடட்டுமே! என்றுதான்.

● உத்தியோகத்தர் ஒருவரின் மக்கள் பணியும், உத்தியோக சார்பற்ற ஒருவரின் பணியும் சமனாகுமா?

தி. கரன், நல்லூர்.

இல்லை. தேசாபிமானி ஆ. சி. முருகுப்பிள்ளை போன்றவர்களின் பணியே பணி; மற்றையது கடமை.




● அர்த்த நடு இராத்திரியில் தாளம் தப்பாமல் கொத்துப் போடும் கொத்துரொட்டிக்காரரின் எதிர்காலம் பற்றி...

சி. சுரேஷ், நல்லூர்.

சாந்தன் கோஷ்டியில் தபேலாஸ் அடிகாரர்களாக மாறலாம். ✲



# பெண் விடுதலை

● மதுபாலா

**"ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கு எதிரான போராட் டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப்போராட்ட மாகும். இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மன வுலக மாற்றத்தைக் குறிக் கோளாகக் கொண்டிருக்க வேண்டும்."**

**— தலைவர்**

தாய்வழிச் சமூக அமைப்பில் இருந்து தந்தை வழிச் சமூக உரு வாக்கத்தின் பின்பே பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை பல வடி வங்களில் முனைப்பாகியது.

இதனால் பெண்கள் பேதமை யுள்ளம் கொண்டவர்களாக மென்மையானவர்களாக வலிமை குன்றியவளாக, தாய்மையுணர்வு கருணை மிக்கவர்களாக சமூகம் கருத்தாக்கத்தை உண்டுபண்ணி விட்டுள்ளதுடன் பெண்கள் பொரு ளாதார நீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் பல ஒடுக்குமுறை களைச் சந்திக்க வேண்டியவர் களாகின்றார்கள்.

இவை சீதனக் கொடுமை, பாலியல் வன்முறை, ஆபாசத் தன்மை, தொழில் ரீதியான கட் டுப்பாடுகள், குடும்பக் கட்டுப் பாடு போன்றனவாம்.

நம் நாட்டுப் பெண்கள் இவ் வாறான தன்மைகளுக்கு பழக்கப்

பட்டவர்களாகவும் இவற்றை சிர மேற்கொண்டு புருஷர்களைப் பூசிக்கும் மனப்பான்மை உள்ளவர்களாகவும் உருவாகியுள்ளனர்.

ஆணாதிக்கம் கொண்ட இந்தச் சமூக அமைப்பில் ஆண்களின் இச்சைகளைத் தீர்க்கும் திரவியமாகவே வாழ்வதில் பெண்கள் திருப்தியடைந்து விடுவதாக பழக்கப்பட்டுள்ளனர்.

'தெய்வந் தொழா அள்கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'

என்ற வள்ளுவரின் பொய்யா மொழியின் பிரகாரம் இவர்கள் வாழ்பவர்களாகவேயன்றி பெண் நிலைவாதக் கருத்துக்களை சரியாகப் புரிந்துகொள்பவர்களாக இல்லை. பெண்விடுதலையைப் பற்றிப் பேசுபவர்கள் ஆடைகளை அவரவர் வசதிக்கேற்ப நாகரிகத்துக்கேற்ப மாற்றம் ஏற்படுத்தும் இயல்பு காணப்படுகிறது. இது பெண் விடுதலையல்ல. 'பெண்விடுதலை என்பது உள்ளத்தில் உண்டாகும் உண்மையான ஒரு மாற்றத்தினால் அமையுமேயன்றி உடைகளினாலோ அன்றி வேறெந்த அலங்கார அலங்கோலங்களினாலோ ஏற்பட்டு விடாது'.

சமூக வரையறைகளையும் மீறி கருத்தாழமுள்ள மாற்றத்தை உருவாக்குவதே பெண் விடுதலைக்கு வழி. பெண்மை என்ற வரையறையில் நின்று பெண் விடுதலை காணமுடியாது. எனவே ஆணாதிக்கத்துக்கெதிரான போராட்டம் புதிய வழிகளில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஆனால் பெண் விடுதலைபற்றி பேசுவதாலோ எழுதுவதாலோ கிடைப்பதொன்றல்ல. நாம் சமூகத்தில் உருவாகும் புரட்சிகரமான மாற்றத்தினாலேயே இது அமையும் என்பதை உணரவேண்டும். ✲

---

## தேசப்பற்று

இந்தியத் தொழில் அதிபர் ஒருவர் ஜப்பானில் ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார். அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த ஜப்பானிய முதியவர் ஒருவர் சீட்டின் மெத்தை கிழிந்துபோயிருப்பதைக் கவனத்துடன் தைத்துக்கொண்டிருந்தார். ''நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்'' என விசாரித்தார் தொழிலதிபர். அந்த வயதானவர் ''இந்த ரயில் எங்களுடைய தேசியச் சொத்து. ஆகவே என்னுடைய சொத்துங்கூட. அதனால் அதைப் பாதுகாப்பதன்மூலம் என்னுடைய சொத்தை நான் பாதுகாக்கிறேன்'' என்றார், தொழிலதிபருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

தொகுப்பு : க. கனகராசா

மு.கு : பருத்தித்துறை நகரசபையினரால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளில் இதுவரையில் 50 வீதமானவை உடைத்து நொருக்கப்பட்டுள்து என நகரசபைச் செயலாளர் திரு. க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

நன்றி : ஈழநாதம் (18-03-94)




# புற்றுநோய்

**புற்றுநோயானது உலகின் மூலைமுடுக்கெல்லாம் புற்றெடுத்துக்கொண்டுள்ளது. இதற்கு ஓரளவு திருப்தி தரும்படியான சிகிச்சை ஆரம்ப நிலையில் வழங்கப்படினும் பலரது இறப்பிற்குக் காரணமாக இது இருந்துவிடுகிறது.**

எமது உடல் பல அங்கங்களைக் கொண்டது. இவை பல அமைப்பொத்த தொழில் ஒத்த கலக்கூட்டங்களாக இருந்து தமது தொழிற்பாட்டை செப்பனே செய்து வருகின்றன.

இவ்வடிப்படை அலகான கலமானது தன்னையொத்த (பருமன் வடிவம், தொழில்)கலங்களையோ அல்லது தன்னிலிருந்து முற்றிலும் வேறுபட்ட விதமான கலங்களையோ (சில சந்தர்ப்பத்தில் எழுந்தமான விதத்தில்) உற்பத்தி செய்கின்றன. இதில் முன்னைய நிலை Benign Growth எனப்படும். இவை பொதுவாக ஆபத்தற்றதாகவும். சிலவேளை சில காலங்களின் பின்னர் தீங்கு விளைவிப்பனவாகவும் அமையலாம். பின்னைய நிலையினை Cancer அல்லது Maligant Growth எனப்படும். இவை பொதுவாக உடலிலிருந்து தீங்கு விளைவிப்பனவாகும்.

இவை முக்கியமாக மூன்று வகைப்படும்.

● க. பிரதீபன்
(யாழ். மருத்துவபீடம்)

1. Carcinoma :

அகத்தோற்படை உற்பத்தியையோ / புறத்தோற்படை உற்பத்தியையோ தாக்குவன.

உ-ம் : நுரையீரல் புற்றுநோய்

2. Sarcomas ;

இடை தோற்படை உற்பத்தியைத் தாக்குவன.

உ-ம் : என்பு மச்சை புற்றுநோய்

3. Leukamia : வெண் குருதி சிறு துணிக்கைகளைத் தாக்குவண.

இம் மூன்று பிரிவுகளும் மேலும் பல தெளிவான எளிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## ○ ஆரம்ப அறிகுறிகள்

புற்றுநோய் தாக்கும் அங்கத்தையும், தன்மையையும் பொறுத்து அறிகுறிகள் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. எனினும் சில பொதுவான அறிகுறிகள் புற்று நோயை இனம் காட்டுகின்றன. இவற்றில் சில வேறு சில நோய்களிற்கும் பொதுவான அறிகுறிகளாக அமைந்து விடுகின்றன. உ-ம் பசியின்மை, நிறைகுறைவு போன்ற அறிகுறிகள் புற்றுநோயில் மட்டுமல்லாது திடீர் காய்ச்சல், சலரோகம், வயிற்றுக் கோளாறுகளிலும் காணப்படலாம். எனவே தகுந்த வைத்திய ஆலோசனை (கீழ்காணும் அறிகுறிகள் தோன்றின்) பெற்று ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்கப்படவேண்டும். முற்றிய நிலையில் புற்றுநோயானது ஆரம்பத்தில் தாக்கிய அங்கத்தில் இருந்து நிணநீர், குருதிக்கலன்கள் ஊடாக விரைவாக வேறு அங்கத்தையோ தொகுதிகளையோ பரவித் தாக்கலாம்.

உ-ம் : மார்புப் புற்றுநோயானது முற்றிய நிலையில் நரம்புத் தொகுதியைத் தாக்கலாம்.

## ○ பொதுவான அறிகுறிகள்

1. கட்டிகள் (Lump)

திடீரென வளரும் கட்டிகள், மந்தமாக விரைவாய் வளரும் கட்டிகள், புற்றுநோய்க் குறியாகவும் அமையலாம். இவை பொதுவாக வலி அற்றனவாகவும் இருக்கலாம்.

உ-ம் : மார்புக் கட்டிகள்

2. திடீர் எதிர்பாராத நிறை குறைவு

இவை உணவுக்கால்வாய் சம்பந்தமானதாகவோ அல்லது நோய் முற்றிய நிலையின் அறிகுறியோ ஆகலாம்.

3. உணவை விழுங்குவதில் சிரமம்
 உ-ம் : களப்புற்று நோய்

4. சமியாமை, வாந்தி, பசியாமை தொடர்ந்து பலநாள் இருத்தல்

5. நீண்டநாளாக மலங்கழித்தலில் சிரமம் (Constipation)

இதனைத் தொடர்ந்து வரும் வயிற்றோட்டம் (Diarrhoea) மலத்துடன் குருதி வெளியேறல். இவை பெருங்குடல் புற்றுநோயின் அறிகுறி ஆகலாம்.

6. நீண்டகாலமாக மாறாத புண்கள் (Nonhealing Ulcers)

உ-ம் : புகையிலை போடுவோர், மது அருந்துவோரது வாய்க்குழிப் புண்கள்

7. தொடர்ச்சியான மாறாஇருமல் இருமலுடன் இரத்தம்

(இவ் அறிகுறிகள் கச நோயிலும் வரலாம்.)

8. குரலில் மாற்றம்

குரலில் தொனி குறைதல், சத்தம் வெளிப்படாமை

(7ஆம் 8ஆம் சுவாசத் தொகுதி சம்பந்தமான அறிகுறிகள்)

9. சிறுநீர் கழித்தலின்போது வலி, குருதி காணப்படல், அடிக்கடி சிறிதளவு சிறுநீர் வெளியேறல்.

உ-ம் : சிறுநீரகப் பாதையில் புற்றுநோய் (Prostate Cancer)

இனி புற்றுநோயை தருவிக்கின்ற அல்லது உருவாக்கத்திற்கு துணைபோகின்ற காரணிகளைப் பார்ப்போம்.

கீழ்க் குறிப்பிட்ட காரணிகள் எல்லோரிலும் தாக்கத்தை உட்படுத்தாவிடினும், காரணி தாக்கும் வீரியத்தையும், தன்மையையும், எவ்வளவு காலத்திற்கு தொடர்ச்சியாக தாக்குகிறது என்பதைப் பொறுத்தே நோய் ஏற்படும் வாய்ப்பு உருவாகிறது.

○ பொதுவான காரணிகள்

1. பௌதீக, இரசாயன காரணிகள் (Cacinogenic Agents)

உ-ம்: அதீத ஊதாக் கதிர்கள் X கதிர்த் தாக்கம், சில இரசாயனக் கழிவுகள் (Stools, Tor, Alkaylating Agents)

2. சில ஓமோன்களின் அளவு குருதியில் அதிகரித்தல்.

உ-ம் : அதீத சுரப்பு, நீண்டகாலக் கருத்தடை மாத்திரை உபயோகம்.

3. சில வைரஸ் (Virus) நோய் Hepatitis – B – Virus – ஈரல் புற்றுநோயை உருவாக்கலாம்,

4. நீண்டகாலமாக மாறாமல் உள்ள நோய்கள் (Chronicdi-sease)

உ-ம் : வயிறு, வாய்க்குழிப்புண்கள், குருதிச்சோகை.

○ சில பிரத்தியகக் காரணிகள்

- சில உயிர்ச்சத்து பற்றாக் குறையுள்ள உணவுகளைத் தொடர்ந்து உண்டுவருதல்,

  உ-ம் : இரும்புச் சத்து Vitamin – A

- நார்ப்பொருள்கள், பழங்கள் அடங்காத உணவுகளை, உட்கொள்ளல்.
- அதிகளவு கோப்பி அருந்துதல்
- சூடான உணவுகளை உட்கொள்தல்.
- கூடுதலான மிளகாய், உப்பு பயன்படுத்தல்
- நாள் கடந்த தகர கொள்கலன்களில் அடைத்த பண்டங்களை உட்கொள்ளல்.

● அளவுக்கு அதிகமாக கொழுப்பு, புரதம் உட்கொள்ளல்.

## ○ சில பழக்க வழக்கங்கள்

● வெற்றிலை :

பொதுவாக வெற்றிலையுடன் பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை சேர்த்துப் போடுதலே வாய்ப்புற்று நோய்க்குக் காரணமாகும்.

● புகைத்தல் :

புகைத்தல் சுவாசத் தொகுதி புற்று நோயை மட்டுமன்றி உடலின் பொதுவாக எல்லா இடத்திலும் புற்றுநோய் உருவாக்கத்திற்கு துணை போகின்றது. அதுமட்டுமல்ல புகை பிடிப்போருடன் நெருங்கி இருப்பவர்களையும் தாக்குகிறது. மற்றும் புற்று நோயால் இறப்போரில் அதிகமானவர்களது இறப்பிற்கு புகைப்பிடித்தலே காரணமாகின்றது.

● மது அருந்துதல் :

அதிகமாக உணவுக்கால்வாய் தொடர்பான புற்று நோயை உருவாக்குகிறது.

உ-ம் : ஈரற் புற்றுநோய்

## ○ புற்றுநோயைத் தவிர்த்தல்

1. அவசியமான உணவுப் பழக்கத்தைக் கடைப் பிடித்தல்.

● தேவையான ஊட்டச்சத்துள்ள உடன் மரக்கறிகள், பழங்கள், பால், இறைச்சி, மீன் வகைகளை உட்கொள்ளல்.

● சூடான, உப்பு, மிளகாய்த் தூள் மிகையாக சேர்க்கப்பட்ட / பழுதான / நாட்பிந்திய உணவுகளைத் தவிர்த்தல்.

2. மது அருந்துதல், புகைப் பிடித்தல், புகையிலை போடுதல், சுண்ணாம்பு, பாக்கு போடுதலைத் தவிர்த்தல்.

3. தொழிற்சாலைக்கு அண்மையில் வீடுகள் அமைத்தலைத் தவிர்த்தல். தொழிற்சாலைக் கழிவுகள் சுகாதார முறையில் அகற்றப்படுதல். பொருத்தமான அங்கிகள், கையுறைகள் முகமூடிகளை உபயோகித்தல்

4. வைத்திய ஆலோசனை இன்றி மருந்துகளை எடுத்தலையும், நீண்டகாலமாக தொடர்ந்து மருந்துகளை பாவித்தலையும் தவிர்த்தல்.

5. நீண்டநாளாக மாறாமல் உள்ள நோய்கள் பற்றி கவனம் எடுத்தல்.

அறிகுறிகள் தென்படின் தாமதிக்காமல் வைத்தியரை அணுகுதல்.

"வருமுன் காப்போம் வளமுடன் வாழ்வோம்" ❋




# தமிழ்மொழியில் பேசுவதுபோன்று எழுதுகின்றோமா?

மொழியின் செயற்பாடு என்ன? மொழியை என்ன வகையில் பயன்படுத்துகின்றோம்? இவற்றை எண்ணததில் கொண்டு ஒரு மொழியினை நோக்க வேண்டும். மொழி என்பது கருத்துக்களைப் பரிமாற்றம் செய்ய உதவும் ஒரு ஊடகமாகும். இந்த ஊடகமான மொழி பெரும்பாலும் இரு வழக்குகளை உடையது. ஒன்று பேசவும் மற்றையது எழுதவுமான நிலையாகும். இவ்வாறு இரு பழக்கத்தினையுடையதாக இருக்கும்பொழுது அவை இரண்டும் ஒரே நிலையில் அமைகின்றனவா? அல்லது இரண்டும் இரண்டு நிலைகளில் அமைகின்றனவா? என்பது முக்கியமான ஒன்றாகும். இந்த வகையில்த்தான் எமது தமிழ் மொழியின் தன்மையை நாம் இங்கு பார்க்கப் போகின்றோம்.

● ம. ஜெயராமசர்மா

தொடர்புச் சாதனமான மொழியைப் பல நிலைகளில் பல இடங்களில் பயன்படுத்துகின்றோம். அவ்வாறு பயன்படுத்தும் வேளைகளில் அவற்றில் வேறுபாடுகளையும் நாம் காணமுடியும். இந்த நிலையில் – பேச்சு மொழியின் அமைப்பு ஒன்றாகவும் – எழுத்துமொழியின் அமைப்பு ஒன்றாகவும் இருப்பதை நாம் காணமுடியும்.

இவ்வாறு இருவேறுபட்ட தன்மைகள் அவசியமா? பேசுவது

போல ஏன் எழுத முடியாமல் இருக்கின்றது? பேசுவதுபோல எழுதினால் அதை எதிர்ப்பவர் யார்? மொழியின் உண்மை நிலை கருத்துப் பரிமாற்றம் எனில் இந்த நிலை அர்த்தமற்றதல்லவா?

இங்கு தான் தமிழ்மொழியின் தனியியல்பு தோற்றம் பெறுகிறது. பேசுவது இலக்கணமற்றதாயும், எழுதுவது இலக்கண வரம்புக்குள் உட்பட்டதாயும் இருக்கிறது - இருக்கவேண்டும் என்ற தன்மையாகும்.

இங்குதான் இலக்கணம் என்ற ஒரு சட்டகம் வருகிறது. இலக்கணம் என்றால் என்ன? மொழியின் இலட்சணம் என்று பொதுவாகக் கூறப்படுகிறது இலக்கணம் என்றால் — மொழியைச் செம்மையாக எழுத - பேச பயன்படுத்த - உதவுவது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

இங்கே பேச்சுத்தமிழ், கொச்சைத் தமிழ், சேரித் தமிழ், இழிசனர் தமிழ் என்ற கருத்தெல்லாம் எமது எண்ணத்தில் சிந்தனையைத் தோற்றுவிக்கின்றன. இதனால் இலக்கணம் என்பது எழுத்துத் தமிழுக்கு மட்டுமா உரியது? பேச்சுக்கு உரியது அன்றா? என்பதும் வினாவாகி விடுகின்றது. மொழியியலாளரின் கருத்துப்படி பேச்சுமொழிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இந்த வகையில் பார்க்கும் பொழுது - மொழிக்கு மொழி - இவ் இரு வழக்குகளிலும் வித்தியாசம் காணப்படுகிறது. ஆங்கில மொழியை எடுத்துக்கொண்டால் பெரும்பாலும் பேசுவதுபோலவே எழுதப்படுகிறது. எழுதுவது போலவே பேசப்படுகிறது. ஆனால் தமிழ் மொழியிலோ - சிங்கள மொழியிலோ - பேசுவது- எழுதுவது இவற்றில் வேறுபாடே காணப்படுகின்றது. இது அவற்றுக்குரிய விசேட இயல்பு எனலாம். அதேவேளை வடமொழியான சமஸ்கிருதம், பாளிமொழி, லத்தின்மொழி என்பன இன்று எழுத்துமொழி என்ற அளவிலேயே அமைந்துவிடுவதைக் காணமுடிகின்றது இந்தியாவிலே பல மொழிகள் பேச்சுமொழியாக இருந்தும் - அவை எழுத்து வழக்கில் வளர்ச்சி பெறாமல் இருப்பதும் மனங்கொள்ளத்தக்கது. வளர்ச்சியடைந்த மொழிகளுக்கே பெரும்பாலும் இந்த இரு வழக்குகளும் அமையப் பெற்றிருக்கின்றன. இந்த வகையில் உலக மொழிகள் வரிசையில் குறிப்பாக வளர்ச்சியடைந்த மொழிகள் வரிசையில் தமிழும் இடம்பெறுகின்றது என்பது பெருமைக்குரியது அல்லவா?

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், வினைமுற்று, வினை எச்சம், பெயர் எச்சம், வேற்றுமை உருபுகள், விகுதிகள், பால் வேறுபாடுகள், திணைவேறுபாடுகள், ஒருமை - பன்மை வேறுபாடுகள், காலவேறுபாடுகள், ஆகுபெயர், அன்மொழித்தொகை,

இயற்சொல். திரிசொல், வட சொல் எனப் பலவகையான இலக் கணக் கூறுகளை நாம் காண வேண்டி ஏற்படுகிறது. இவை யாவும் எழுத்துமொழியை அரண் செய்து நிற்கின்றன. இதனால் ஒரு வினா எழுகிறது. பேச்சு மொழியில் இவை முக்கிய மானவை இல்லையா? என்பதா கும்.

தற்காலத்தில் பேச்சுத்தமிழ் முக்கியத்துவம் பெற்று வருகின் றது. குறிப்பாக நாவல் இலக் கியம், சிறுகதை இலக்கியம், நாடகங்கள் – இவற்றில் இதன் செல்வாக்கு மேலோங்கி நிற்கின் றது.

நாவல்களில் வருகின்ற பாத் திரங்கள் – ஒருவரோடு ஒரு வர் உரையாடும்பொழுது – இம் முறை கையாளப்படுகிறது. இவ் வாறு பேச்சு மொழியினைக் கையாள்வது – கதைக்கு வலுவூட் டுகிறது என்ற அபிப்பிராயம் காணப்படுகிறது. இங்கு பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழாகி நிற் கின்றது. ஒரு சாதாரண தொழி லாளியோ அல்லது விவசாயியோ எப்படிக் கதைப்பானோ அப் படியே அப்பேச்சு அச்சொட்டாக எழுத்தில் வடிக்கப்படுகிறது. இதில் இலக்கணப் பிழைகள் என்று எழுத்து மொழியில் கொள் ளப்படும் தவறுகள் இருக்கும். இருந்தும் இடத்துக்கு ஏற்றது என்ற நிலையில் பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழாகி விடுகிறது.

இன்று பாடசாலைகளில் இடம்பெறும் தமிழ் மொழிப் பாடப் புத்தகங்களில்கூட – பேச் சுத் தமிழ் எழுத்து வடிவில் இடம் பெற்று நிற்கின்றது.

நாட்டார் இலக்கியங்களில் கையாளப்படும் சொற்கள் பேச்சு மொழிச் சொற்களாக இருக்கின் றன. சினிமாப் பாடல்களில் பல பேச்சு மொழியினைக் கொண்டு அமைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பேச்சுத் தமிழ் கையாளப்படுகின்றபொழுது சில சிக்கல்களுக்கு வழிவகுத்து வருகின் றது. சாதாரண பாமர மகனுக்கு இந்த மொழி வழக்குப் பற்றிக் கவலை இல்லை. அவன் இதனைப் பெரிதுபடுத்தவும் மாட்டான். ஆனால் படிக்கின்ற நிலையில் உள்ளவர்களுக்கு இது ஒரு பிரச் சனையாகி நிற்கும்.

ஆண்டு ஒன்றிலே பாடசாலையி னுள் காலடி எடுத்துவைக்கும் ஒரு பிள்ளை – பேச்சுத் தமிழில் நன்கு பரிச்சயமானவனாகவே காணப் படுகின்றான். அவனுக்கு எழுத்து மொழிபற்றிய அறிவுகுறைவாகவே உள்ளது. இதனால் அப்பிள்ளை மொழியைக் கற்கின்றபொழுது சிக்கலுக்கு உள்ளாகிறான். வீட் டில் இலக்கண வழுவோடு பேசி யவன்–அதனை அப்படியே எழுதி விட முயலும் வேளை அது பிழை யானது என்று சொன்னால் அவ னுக்கு ஒருவித பயமும் – தெளிவு இன்மையுமே ஏற்படுகிறது. இங்கு

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

பேசுவது போல எழுத முடியாத நிலை காணப்படுகிறது.

ஆண்டு ஒன்று மாணவன் படிப்படியாக வளர்ந்துவரும் பொழுது - அவனது பேச்சு மொழியின் ஆட்சி மேலும் வலுப்பெறுகிறது. இவன் மேல் வகுப்புகளிற் கூடப் பேச்சு மொழியினையே எழுத்தில் காட்ட முயன்று விடுவதை யதார்த்தமாகக் காணமுடிகிறது. இங்கு தமிழ் மொழியின் இரு வழக்குப் பண்பு தடுமாறவே வைக்கின்றது. இவ்விரு வழக்குப் பண்பு - தமிழுக்கு மட்டுமல்ல - அரபு, கிரேக்க, ஜேர்மன், சுவிஸ், சீனம் போன்ற மொழிகளிலும் காணப்படுகிறது.

இந்நோக்கில் - பேச்சுத்தமிழ் - எழுத்துத் தமிழ் அதாவது இலக்கியத் தமிழ் இரண்டுக்குமிடையே வேறுபாடுகளைப் பார்ப்போம்.

| இலக்கியத் தமிழ் | பேச்சுத் தமிழ் |
|---|---|
| அவனுடைய | அவண்ட |
| சாப்பிட்டேன் | திண்டேன் |
| வந்தேன் | வந்தனான் |
| நீ வந்தாய் | நீ வந்தனீ |
| படித்தேன் | படிச்சேன் |
| அடித்தேன் | அடிச்சேன் |

இவை சில எடுத்துக் காட்டுக்களாகும். இவை போல பல சொற்கள் இரண்டு வழக்குக்கும் இடையே காணப்படுகின்றன. இதை நன்றாகப் படித்தவர்களும் கையாளுகின்றனர் - தமிழ் பண்டிதர்கூட தனது குடும்பத்தினருடன் - தொழிலாளருடன் - நண்பருடன் - கடைகளில் பொருட்கள் வாங்கும் பொழுது பேச்சுத் தமிழையே பயன்படுத்துகின்றார். இலக்கண வரன்முறை இங்கெல்லாம் அவ்வளவு பேணப்படுவதில்லை. ஆனால் அதே பண்டிதர் எழுதும் பொழுது - தான் பேசிய முறைப்படி எழுதவே மாட்டார். காரணம் எழுத்து என்று வரும் பொழுது - அங்கு சில பண்புகள் பேணப்படவேண்டியுள்ளன. இதனை நாவல், கதை, நாடக நிலையில் கூடத் தவறவிடுவதில்லை.

கதையில் வரும் பாத்திரங்கள் மட்டும் பேச்சுத் தமிழில் பேசவிடும், கதாசிரியர் - கதையினை வளர்த்துச் செல்லும் பொழுது - எழுத்துத் தமிழையே கையாளுகின்றமை கருத்தில் இருத்த வேண்டியதொன்றாகும்.

இவற்றை நோக்குகின்ற பொழுது - பேசுவதுபோல எழுதுவது இல்லை என்பது புலனாகிறதல்லவா? பேசுவதுபோல எழுதப்படுவது குறிப்பிட்ட சில விடயங்களுக்கே என்பதும் காட்டப்பட்டுள்ளது. எனவே தமிழில் பேசுவது போல எழுதுவதில்லை என்பதை மனத்தில் இருத்திக்கொள்வது மிக நல்லதாகும். குறிப்பாக மாணவ நிலையில் உள்ளவர்கள் இக் கருத்தை மனத்தில் பதித்துக் கொள்வது சாலச்சிறந்ததாகும். ❋



வீழாத பகைமை வீழ்வது மாற்றம்

# பெரும்பாடு உனக்கு இருக்காது



வறுமைப் புயலிற் சிக்கினாலும்
பெறுமையோடு இருக்கின்றாய்
மறுமைப் பலனைப் பெறுவதற்கோ — இன்னும்
வெறுமை வயிற்றைக் காக்கின்றாய்

கவலைத் தொனிப்பை உணர்த்தும் கண்கள்
நாட்டின் விடிவைத் தேடுது
உண்டியற்று விலா எலும்பும்
உனது பசியைக் காட்டுது

மாடு என்னும் செல்வம் மாண்டது — இலம்
பாடு உன்னைச் சூழ்ந்துகொண்டது
நாடு ஒன்று கிடைத்தபின் — பெரும்
பாடு உனக்கு இருக்காதப்பா.

● ந. பிரியதீபன்
யாழ். மத்திய கல்லூரி

## சுந்தரின் பக்கம்






பாழான பழமை பாழ்படுவது மாற்றம்

# ஜெயராஜ் ? பதில்

● பெண்களை எளிதாகக் கவர என்ன வழி?

க. வரதன்

நிமிர்வோடும் கம்பீரத்தோடும், ஒழுக்கத்தோடும் பெருந்தன்மையோடும் ஆணிருந்தால், பெண் கவரப்படுவாள். சுருங்கச் சொன்னால், பெண்களை எளிதாகக் கவர என்ன வழி? என்று சிந்திக்காமல் இருப்பதே பெண்களைக் கவர சுலபமான வழி (கொடி அசையாது நிலைத்து நிற்கும் தடியைத்தான் தேடிப் படரும்)

● இராமாயணத்தில் பிடித்த அம்சங்கள் எத்தனையோ உண்டு. பிடிக்காத அம்சங்கள் ஏதாவது உண்டா? (வாலி வதையைத் தவிர)

பதில் சொல்ல முடியாதென்பதே இக் கேள்விக்குப் பதில். காரணம் பத்தாண்டுகளுக்கு முன் பிடியாத பகுதி இன்று பிடிக்கிறது. முன் பிடியாமல் விட்டதற்கு காரணம் என் அறியாமை தானென்று தெரிகின்றது. இன்று பிடியாமலிருப்பது நாளை பிடிக்க வாய்ப்பிருக்கும்போது எப்படி பதில் சொல்வது?

● மரபுக்கவிதை என்றால் என்ன புதுக்கவிதை என்றால் என்ன?

லோ. சிறீதரன்

கவிதை என்பது ஒன்றே தான். கவித்துவம் உள்ள தனைத்தும் கவிதையே. இலக்கணத்திற்கு அமைந்தது மரபுக் கவிதையென்றும் அமையாதது புதுக்கவிதை என்றும் சிலர் நினைக்கின்றனர். வெண்பாவோ விருத்தமோ



அவ்வடிவு தோன்றிய காலத்தில் அவையும் புதுக்கவிதை



வெள்ளாடொன்று வேங்கையாதல் மாற்றம்

களாய்த்தான் இருந்திருக்கும். நாளடைவில் புதுக்கவிதைக்கும் ஒரு வரைவிலக்கணம் உருவாகும். மற்றொரு புது வடிவு தோன்ற இன்றைய புதுக்கவிதை மரபுக் கவிதையாகும்.

● தலைவலி எவ்வாறு உண்டாகிறது;

லோ. கிரிதரன்

இடம் தெரியாமல் கேட்கப்படும் இத்தகைய கேள்விகளைப் படிக்கும்போது.......

● நாவல், சிறுகதை, கவிதை யாகியவற்றில் தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதி சாதனை படைத்தவர்கள் யாவர்?

பொ. ஜெயந்தன்

எனக்குத் தெரியாது. பல்கலைக்கழக ஆய்வாளர்களிடம் கேட்டால் இது பற்றிச் சொல்வார்கள் என நினைக்கிறேன், தங்கள் கேள்வியிலே ஒரு திருத்தம். நிறைய எழுதுவது மட்டும் ஒருகாலும் சாதனையாகாது. திருவள்ளுவன் ஒருநூல்தான் செய்தான்.

● உங்களுக்குச் சூட்டும் பட்டங்கள் பற்றி யாது கூற விரும்புகின்றீர்?

க. நாதன்

அறியாமையின் வெளிப்பாடுகள். பின் ஏன் ஏற்கிறீர்கள் என்ற கேள்வி வரும். அன்பின் வெளிப்பாடாய் அறியாமை அமையும்போது அதுவும் இரசிக்கத் தக்கதே.

● அறிஞர் அண்ணா 'கம்பரசத்'தில் கம்பராமாயணத்திலே செக்ஸே அதிகமாக உள்ளதாக கூறுகின்றார். அதற்கு உங்கள் கருத்து யாது?

கே. தயாளினி

இதற்கு வள்ளுவன் பதில் சொல்லியிருக்கிறான். அதையே தருகிறேன்.

'நுண்ணிய நூல் பல கற்
கினும் மற்றுந்தன்
உண்மையறிவே மிகும்'

கடலுக்குள் சிப்பியெடுக்கிறவனும் இருக்கிறான் முத்தெடுப்பவனும் இருக்கிறான் தான் எடுத்ததுதான் கடல் முழுவதும் இருக்கிறதென்பது எடுப்பவனது அறியாமையே தவிர கடலில் குற்றமல்ல.

● தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்பவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

இ. சிவதர்சினி

'நீர் வார்த்து நெருப்பை வளர்க்க நினைப்பவர்கள் போல...' என்று ஒரு பழைய பாட்டுச் சொல்கின்றது.

அடுத்த இதழிலும் கம்பவாருதி இ. ஜெயராஜ் அவர்கள் பதிலளிக்கிறார். உங்கள் கேள்விகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

ஆ-ர்



மகவொல்று அகவடைதல் மாற்றம்

# திருக்குறளில் உடல் உறுப்புகள்

தலைமுடியில் இருந்து பாதம் வரை அனைத்து உறுப்புகளையும் திருக்குறளில் காணலாம்.

- முடி

  'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
  உயிர்நீப்பர் மானம் வரின்'

- தலை

  தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
  நிலையின் இழிந்தக் கடை'

- நெற்றி

  'முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
  பைந்தொடிப் பேதை நுதல்'

- புருவம்

  'கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
  செய்யல மன்இவள் கண்'

- கண்

  'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
  புண்ணுடையர் கல்லா தவர்'

- மூக்கு

  'புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
  மூக்கிற் கரியார் உடைத்து'

- வாய்

  'இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
  ஒழுக்க முடையார் வாய்ச் சொல்'

- பல் (எயிறு)

  'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
  வாலெயிறு ஊறிய நீர்'

- நாக்கு

  'யாகாவாரா யினும் நாகாக்க காவக்கால்
  சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'



இளநங்கையொருத்தி தாயாவது மாற்றம்

✲ முகம்
'முகம்நோக்கிய நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்'

✲ தோள்
'கொடியார் கொடுமை உரைக்கும் தொடியோடு
தொல்கவின் வாடிய தோள்'

✲ காது
'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை'

✲ எலும்பு
'என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்'

✲ கை
கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்'

✲ மார்பு
'பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர்
நண்ணேன் பரத்தன் மார்பு

✲ வயிறு
செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்'

✲ இடை (நுசுப்பு)
'அனிச்சப் பூக்கால் களையான் பெய்தாள்சுப்பிற்கு
நல்ல படாஅ பறை'

✲ கால்
காலாழ் களிரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு'

✲ பாதம்
'தனக்குவமை இல்லாதான் தான் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'

✲ விரல்
'வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்'

ஆதாரம் : சங்கநாதம், லண்டன் 1993

தொகுப்பு : சி. வ. ஆறுமுகசாமி



கானல் நீர் கங்கையை அடைவது மாற்றம்

# சுய நினைவுகள்

● மௌனிகா

● ''பாடசாலைகளில் சஞ்சிகைகள் விற்கத் தடை''

— உயர் அதிகாரி

பாடசாலைகள் புத்தகக் கடைகள் அல்ல தான்...... ஆனால், புத்திஜீவிகளைச் சிருஷ்டிக்கும்கோவில்கள் அல்லவா. புத்தகப் பூச்சிகள் புத்திஜீவிகளாகுமா?

● சிவராத்திரியன்று அர்த்த நடு ராத்திரியில் கோவில்களின் உள்ளே இருள் கூட்டம் ஒளிந்திருக்க வெளி வீதியில் மின்னொளியில், சுவாமி வீதி உலா அல்ல...? சினிமாப் படக்காட்சி.

● ஒரு ரூபா முத்திரை வாங்க பத்து ரூபா கொடுத்து மாற்றக் கேட்ட போது சில்லறை இல்லை என்றவர், கன்னியொருத்தி ஒரு ரூபா முத்திரை வாங்கி நூறு ரூபா நீட்ட தொண்ணூற்றி ஒன்பது ரூபா சில்லறை கொடுத்த வேளைகள்.......

● 'மாற்றம்' வாங்கியே பாராத ஒரு பெருந்தகை மாற்றம் மக்கள் சஞ்சிகை பற்றிப் பண்ணிய விமர்சன நினைவுகள்...

● பாடசாலை ஒன்றுக்கு அலுவலாகச் சென்ற எம்மை பாடசாலை அதிபர் அமரச் சொன்னபோது 'சீ... பரவாயில்லை என்று கூறவைத்தது அந்தநீள இருக்கை. இல்லை என வலுக்கட்டாயப்படுத்தி இருத்தியவேளை நீள இருக்கைப் புழுதிகள் எமது ஆடையை ஆட்கொண்ட வேளை...

● காரைநகர் கம்பன் விழா கலா மண்டபத்தில் நடைபெற்ற போது 'கம்பன்' இந்திர லோகத்திலிருந்து வந்திருந்ததை யாவரும் அறிவர். கூனி, வாலி, சீதை, கும்பகர்ணன், இராவணன், இவர்கள் எல்லோரும் கம்பனை சந்தித்துப் பேசினர். ஆனால் இக்கம்பன் விழாவில் தம்பி பரதர் (கள்) வந்திருந்ததை பலரும் விழா முடிவிலேயே அறிந்தனர். தங்கள் பாதரட்சைகளை தேடிய வேளையில்......

"எங்கள் மனதில் பதிந்த,
சிந்தனையில்
பூத்த எண்ணங்கள்
சுய நினைவுகளாகும்"



மோதல் நின்று காதலாவது மாற்றம்

## தமிழ்த்தாய் மன்றம் அறிமுகப்படுத்தும்
## இந்த ஆண்டுக்கான 1994
# தேசாபிமானி யார்?

நீங்கள் செய்யவேண்டியது இதுதான். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பொது நலனையே கருத்திற்கொண்டு தமிழ் மக்களுக்குப் பணியாற்றுகின்ற மனிதர் யார்? அவர் ஆற்றும்பணி என்ன? போன்ற விபரங்களை அனுப்பி வையுங்கள்.

நடைபெறும் சுற்றுக்களில் அதிகப்படியான ஆதரவுச் சீட்டுக் களைப் பெறுவர் '1994 ஆம் ஆண்டுக்கான தேசாபிமானி'யாகக் விருது வழங்கி கௌரவிக்கப்படுவார்.

### போட்டி விதிகள்

1. போட்டிகள் ஒவ்வொரு காலாண்டு இதழ்களுக்குமாக மூன்று சுற்றுகள் நடைபெறும்.
2. 'மாற்றம்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் படிவங்களே நிரப்பி அனுப்பப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு சுற்றிலும் மூன்று வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப் படும். பரிசுத்தொகை ரூபா 500-00. பரிசுக்குரியவர்கள் குலுக் கல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.
4. படிவங்களை 15 – 05 – 1994க்கு முன் 'மாற்றம்' புத்தகசாலை நல்லூர் சந்தை, கல்வியங்காடு என்ற புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
5. முதலாவது சுற்று முடிவுகள் அடுத்த மாற்றம் இதழில் பிரசுரிக் கப்படும்.
6. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. எந்தவிதமான கடிதத்தொடர்பு களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

---

**போட்டி இல: 01**

### ஆதரவுச் சீட்டு: 01

உங்கள் பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

தேசாபிமானியின் பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

என்ன காரணங்களுக்காக அவரைத் தேசாபிமானியாகத் தெரிவு செய்கிறீர்கள்? குறைந்தது ஐந்து காரணங்கள் எழுதுங்கள்,



# பெண்களும் உளவியலும்

சில பெண்கள் உடல் அழகு குறைவதையும் தலைமுடி உதிர்வதையும், உடல் பருமனாவதையும் நினைத்து கவலையுறுகின்றனர்.

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்
வையவாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக்குளே
தாதர் என்ற நிலைமைமாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே'

என்று விடுதலை புரட்சிக்கு வீரமுழக்கம் செய்த புரட்சி கவி பாரதியாரின் கூற்றிற்கிணங்க பெண்கள் தொடர்பான அழுத்தங்களை நோக்கும்போது அவை உளவியல் சார்ந்த ஆளுமைவளர்ச்சியோடு இணைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

● தெல்லியூர் வே. சக்திவேல்

பெண்கள் தொடர்பான மும்முனை அழுத்தங்களை நோக்கும் போது (1) பெண்களால் பெண்களுக்கு சுமத்தப்படும் அழுத்தங்களும் உள ரீதியான தாழ்வு சிக்கலால் ஏற்படும் அழுத்தங்களும். (2) சமூக பண்பாட்டு மூடநம்பிக்கையினால் ஏற்படும் அழுத்தங்கள். (3) ஒரு வகைப்பட்ட ஆண் மேலாதிக்கத்தினால் ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள் என கொள்ளலாம்.

ஓர் உளவியல் அறிஞரின் அறிக்கைப்படி பெண்களை வெறுக்கும் ஒவ்வொரு ஐந்து நபர்களில் ஓர் ஆண் மட்டுமே காணப்படுகின்றான். மற்றைய நால்வரும் பெண்களே என்று குறிப்பிடுகின்றார். பெண்களிடம் காணப்படும் உளவியல் ரீதியான தாழ்மை உணர்வே அவர்களது ஆளுமை திறமையை குறைப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது.

ஆணைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான விடயத்தைச் செய்யும்போது தோல்வியடைந்து விட்டால் என்ன செய்வது என்று மட்டுமே கவலையுறுகின்றனர். ஆனால் ஒரு பெண்ணைப் பொறுத்தவரையில் தோல்வியைக் கண்டு அஞ்சுவதுடன் வெற்றியையும் கண்டு அச்சம் கொள்கின்றாள்.

பெண்களில் பலர் திருமணம் செய்யும்போது அவர்களை விட கல்வியில் சிறந்த ஆளுமை கொண்ட, உயரம்கொண்ட ஆண்களையே விரும்புவதாக உளரீதியான ஆய்வுகள் மூலம் அறியக் கூடியதாகயுள்ளது. இதனால் உயரமான பெண்கள் மேற்படிப்பு குறித்து அதிகம் கவலையுற்று இடையில் கல்வியை நிறுத்திவிடுகின்றார்கள். பெண்கள் பதவியில் உயர்வடையும் போது பல மனத்தகு மாற்றங்களுக்குள்ளாகின்றனர். பதவி உயர்வு கிடைத்த பெண் தனது பதவி உயர்வு

## குங்குமம்

- குங்குமம் ஒரு தொற்று நீக்கி (மூலப்பொருள் கஸ்தூரி மஞ்சள் போலிகள் அல்ல)
- ''ஆடவனே! சற்று சிந்தித்து நோக்கு நோக்கு. நான் ஒருவனின் சொத்து என்னை மதித்து நட'' என ஆடவர் உலகுக்கு மங்கையரிலிருந்து மனையாளைப் பிரித்து அறிந்து நடக்கச் செய்யும் ஒரு சின்னம் (தாலியைத் தேடிப் பார்த்தாலே தெரியும்.)
- பசியோடு மேயும் காளையின் பார்வையை அலையவிடாது நெற்றியில் மட்டும் குவிக்க வைக்கும் ஓர் ஆயுதம்.
- மேஸ்மரிசம், ஹிப்னொட்டிசம் எந்த ஒரு உளவியற் செயற்பாட்டினாலும் மயங்கவைக்க, மயக்க முடியாத ஒரு அபரிமித சக்தியைக் கொண்ட கவசம்.
- அதற்கும் மேலாக எம் முன்னோர்கள் வைத்தார்களே நெற்றியும் புருவங்களும் சந்திக்கும் அவ்விடத்தில் வைப்பதால் ஏற்படும் அழுத்துவிசை நரம்புகளைத் தூண்டி இரத்த ஓட்டத்தைச் சீராக்கும் ஒரு வைத்தியச் செயற்பாடு.

தொகுப்பு : அ. ஆனந்தராசா

குறித்து ஏனைய ஆண் அதிகாரிகள் பொறாமையடையலாம் என எண்ணுகின்றார். மேலும் தனது பதவி உயர்வினால் கணவனினது தேவை விருப்பங்களை நிறைவேற்ற முடியாது போகலாம் என மனக்கலக்கமும் கொள்கின்றாள்.

இலக்கியங்களில் கூறப்படும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பெண்ணின் குணநலன்களுக்கு சமூக பண்பாட்டு ஒழுக்கங்களும் ஈஸ்திரஜன் போன்ற அகஞ்சுரக்கும் சுரப்பிபிகளின் சுரப்புகளும் காரணமாய் அமைகின்றன பல பெண்கள் உடல் அழகு குறைவதையும் தலைமுடி உதிர்வதையும் உடல் பருமனாவதையும் நினைத்து கவலையுறுகின்றனர். மேலும் பெற்றோர்களது கடுமையான ஒழுக்க உத்தரவுகளினால் பெண்ணின் பண்புகளான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு மிகவும் அளவு கடந்து காணப்படலாம் என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இளம் பெண்களுக்கு பூப்படைதலைப் பற்றி பெற்றோர்கள் அறிவுரை கூறாது விடுகின்றனர். திடீரென்று எதிர்பாராத காலத்தில் முதல் பூப்படைந்த பெண் அந்நிகழ்ச்சியை பயத்தோடு கோழையாக ஏற்கின்றாள். மேலும் புணர்ச்சி, குழந்தைப் பேறு பயங்கரமான கதைகளை கேள்விப்படுவதால் மங்கையர்கள் மகப்பேற்று காலங்களில் பலவித உளரீதியான சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இதேபோன்று சில வயோதிபப் பெண்கள் பூப்பு முடிவுறுதலைப் பற்றி பல பயங்கரமான செய்திகளை சமுதாயத்தில் பரப்புவதால் பூப்பு முடிவில் அவதியுறப் போகின்றோமே என்று அச்சம் கொள்கின்றனர். பல பெண்கள் மாதவிடாய் முடிவுறும் காலத்தில் கணவன் தங்களை நிராகரிப்பார்களோ என்று பயம் கொள்கின்றனர். மேலும் குழந்தைகளில்லாத பெண்கள் மாதவிடாய் காலம் முடிவடைதலை பற்றி பெரும் ஏக்கம் கொள்கின்றனர்.

மாதவிடாய் ஏற்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்பு சில பெண்

ஒருவர்:

ஏன் எல்லாரும் மண்ணெண்ணை 'ரியூப்போட' பெரியாஸ்பத்திரிக்கு ஓடுகினம்?

மற்றவர் :

ஆரோ மண்ணெண்ணை குடிச்சவர் எண்ணை எண்ணையா வாந்தி எடுக்கிறதா நியூஸ் வந்தது அது தான்.

— காண்டீபன்

கருத்துக்கள் கட்டுரையாளர்களது;
எழுத்துக்கள் எழுத்தாளர்களது. ஆ-ர்

களுக்கு மன அழுத்தம் (Premenstrual tension) ஏற்படுகின்றது. பயம், பதட்டம், எரிச்சல் உந்தி பெருத்தல். குமட்டல், தலைவலி கவலை ஆகிய அறிகுறிகள் இதன் போது ஏற்படுகின்றது. வயது முதிர்ந்து மாதவிடாய் நின்ற காலத்தில் மனதில் தோன்றும் உணர்ச்சி கொந்தளிப்புகளினால் (Menopausal syndrome) கோபம் படபடப்பு. எரிச்சல், கவலை, உடல் வெம்மை போன்ற அறிகுறி களை காட்டுவர். இவ்வித அச்சங்களை போக்குவதற்கு மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது முக்கியமானது. பெண்களது உணர்ச்சி மாற்றங்களால் மாதவிடாய் வராது போகலாம். அல்லது மாதவிடாயின் போது வலி ஏற்படலாம்.

புணர்ச்சிக்கு முன் காதல் பேச்சுக்களை நிகழ்த்துவதுடன் ஆண்கள் அவசரப்படாமல் நிதானமாக புணர்ச்சியை நிகழ்த்தினால் புணர்ச்சி வலியை ஒருவாறு பரிகரிக்கலாம் என மருத்துவ உளவியலளார்கள் கூறுகின்றனர். சில பெண்கள் தமது இளமைக்காலத்தில் ஆண்களின் சேர்க்கையினால் ஏற்பட்ட வடுக்களை கண்டு பயந்து புணர்ச்சியை வெறுப்பதோடு ஆண்களை கண்டாலும் வெறுப்பு அடைகின்றனர்.

## நீங்கள் எப்படி தூங்குகிறீர்கள்?

மனிதன் தூங்கும்பொழுதுள்ள உள்ள நிலைக்கும் அவனது மனோ நிலைக்கும் நேரிடையான சம்பந்தம் உண்டாம்.

1. குப்புறப் படுத்துத் தூங்குபவர்கள் பலவித மனப்பான்மைகளால் அவதிப்படுகிறார்கள். வேலையில் நிம்மதி இருப்பதில்லை.

2. சுருண்டு படுத்திருப்பவர்கள் தனிமை எண்ணம் உடையவர்கள். ஆதரவுக்காக ஏங்குபவர்கள்.

3. நிமிர்ந்து படுத்துத் தூங்குபவர்கள் மிகவும் தன்னம்பிக்கை உடையவர்கள் தங்கள் இலட்சியத்தை அடைவதற்கு எந்த முறையையும் உபயோகிப்பவர்கள்.

4. தலை வரை போர்வையால் மூடிக்கொண்டு தூங்குபவர்கள் தன்னம்பிக்கை அதிகம் அதிகம் இல்லாதவர்கள்.


5. வலது பக்கமாகப் படுத்துத் தூங்குபவர்கள் தங்களது தொழிலில் நம்பிக்கையும் உறுதியும் கொண்டவர்கள். ஆனால் மேலும் முன்னுக்கு வருபவர்கள் அல்ல.

6. இடது பக்கமாகத் தூங்குபவர்கள் கலை, ஞானம் உடையவர்களாக இருப்பார்கள்



கையாளாகாதவர்கள் கட்சிக் கொடி துறத்தல் மாற்றம்

போட்டி இல: 06




போட்டி முடிவுத் திகதி 28 - 05 - 1994

→ இடமிருந்து வலம்

1. காவோலை விழ இது சிரிக்கும்.
4. இது சிறிது என்றாலும் காரம் பெரிது.
6. இதற்கு கடிவாளம் பூட்டுவார்கள்.
7. இதை சோற்றுடன் சேர்த்து உண்பர்.
9. நாய் குரைத்தால் இதில் போடு என்பர்.
11. இது விதி, முறைமை எனப் பொருள்படும்.

↓ மேலிருந்து கீழ்

1. குற்றமுள்ள நெஞ்சம் ......
2. சிவனின் ஒரு வடிவம்; ஈற்றொழிந்தது.
3. முற்காலத்தில் ஆண்களும் அணிந்த ஒரு வகை அணி.
5. சீப்புக்கள் பல சேர்ந்தது; தலைகீழாகியது.
8. கரைவது இதுவும் தான்.
10. மெல்ல எனப் பொருள் தருவது.

போட்டியில் யாவரும் பங்குகொள்ளலாம். இக்கூப்பனை நிரப்பி 'மாற்றம் புத்தகசாலை' நல்லூர்ச்சந்தை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். பரிசுத் தொகை ரூபா 99–00

பெயர் : ..........................................................................................

பாடசாலை: ..........................................................................................

முகவரி : ..........................................................................................

அதிபரின் ஒப்பம்: ..........................................................................................

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவு : 5

→ 1. கண்ணி
2. கோகுலம்
3. எடிசன்
4. கைம்மாறு
5. முடவ(ன்)
7. வலம்புரி
8. நுளம்பு
9. எருது

↓ 1. தங்கை
2. கோடி
3. எறும்பு
6. வயது
7. வள(ம்)

### பரிசு பெறுவோர் :

1. சொ. ஜெ. சுமந்திரன் கொ. இந்துக்கல்லூரி
2. ச. சஞ்சயன் யா / யூனியன் கல்லூரி
3. ஜெ. உருத்திரகுமார் யாழ். மத்திய கல்லூரி
4. சி. கிருஷ்ணமாலா யா / வைத்திஸ்வரா கல்லூரி
5. து. பிரசாந்தன் யா / இந்துக்கல்லூரி

## அறிவியல் மாமாவின் இம்முறைக் கேள்விகள்

1. உயிர்வாயு என்பது என்ன? அது எப்படி உற்பத்திசெய்யப்படுகிறது? — கி. சுதா, நல்லூர்

3. வானவெளியில் வளிமண்டலத்துக்கு அப்பால் பயணம் செய்பவருக்கு வானம் கருமையாகவே தோன்றும் எனக் கூறப்படுகிறது இது ஏன்? — ச. மோகன், மானிப்பாய்

4. மசகிடும் எண்ணெயை இயந்திர சாதனங்களில் உபயோகிக்கும் நோக்கம் யாது? — வி, சுரேஸ், நெல்லியடி

4. அதி நவீன கம்பியூட்டர் சாதனமா? மனித மூளையா ஆற்றல் கூடியது? — க. வினோ, மானிப்பாய்

5. வௌவால் குரும்மிட்டிலும் எதிரிலுள்ள தடைகளில் மோதாமல் பறக்கிறது. இது எப்படிச் சாத்தியமாகிறது? — சி. நந்தினி, சுண்டுக்குளி



கண்ணீர் கங்கை கடலையடைவது மாற்றம்

## அறிவியல் மாமா

மாமா கேட்ட சிந்தனையைத் தூண்டும் கேள்விகளுக்கு பலர் சரியான விடைகளை அனுப்பியிருந்தார்கள். மாமா கேட்டபடி உங்களில் பலர் கேள்விகளையும் கேட்டுள்ளார்கள். நீங்களும் கேட்கலாம். அக்கேள்வி சிலவற்றை இங்கு பிரசுரிக்கின்றோம். பதில்களை விளக்கமாக எழுதுங்கள்.

### சென்ற முறைக்கான கேள்விகளுக்கான விடைகள்

1. மின்னலின் மின்சக்தியை சோதனை மூலம் ஆராய முற்பட்ட விஞ்ஞானி யார்?

த. யூலிதயாள், பு. நந்தினி, த. சுவேதன்

பெஞ்சமின் பிராங்ளின்

2. அறிவியல் அறிஞர் மாமேதை ஐன்ஸ்ரீன் கண்டுபிடித்த தத்துவம் யாது?

த. சுவேதன், ம. பிரபாகரன்

பொது, சிறப்புச்சார்பியற் தத்துவம்.

3. இரும்பு நீரில் அமிழ்கிறது. ஆனால் இரும்பால் செய்த கப்பல் நீரில் மிதக்கிறது. இதற்கு காரணம் தருக.

இ. ராஜன்

ஒரு இரும்புத் துண்டு நீரை விட அடர்த்திகூடியது. அத்துடன் அது தனது நிறைக்குச் சமமான நீரை இடம் பெயர்ப்பதில்லையாதலால் நீரில் மூழ்கிறது. ஆனால் இரும்பினால் செய்த கப்பலில் உடகன அளவு அதிகமாக இருப்பதனால் அது இடம்பெயர்க்கும் நீரின் நிறை கப்பலின் நிறைக்குச் சமனாக வருதலினால் அது மூழ்காமல் மிதக்க முடிகிறது. ஒரு பொருள் நீரில் மூழ்கும்போது அதன் கனஅளவுள்ள நீரையே இடம்பெயர்க்கும் என்பது ஆக்கிமிடீசின் விதியாகும்.

4. குண்டு வெடிக்கும்போது காது செவிடுபடும்படியான ஓசை வருவதற்குக் காரணம் என்ன?

ந. கோகுலன், ச. மோகனரூபன்

குண்டு வெடிக்கும்போது அதில் அடங்கியுள்ள – சிறிய கன அளவில் இறுக்கமாக அடைக்கப்பட்ட வெடிபொருட்கள் எரிந்து பல மடங்கு கன அளவுள்ள வாயுக்களை உண்டாக்குகின்றன. இதனால் ஏற்படும் பிரமாண்டமான வாயு அமுக்கம் காரணமாக குண்டு வெடித்துச் சிதறுகிறது. இந்தத் திடீர் வாயு விரிவினால் காது செவிடுபடும்படியான சத்தம் வருகிறது. அங்கு ஏற்படும் அமுக்கம் வளிமண்டல அமுக்கத்தைவிட பலநூறு மடங்கு அதிகமாக இருக்கும்.

1. ஒரு இறாத்தல் பஞ்சா ஒரு இறாத்தல் இரும்பா உண்மையில் நிறை கூடியது?

சி. வேலவன், தி. துவாகரன்

ஒரு இறாத்தல் பஞ்சும் ஒரு இறாத்தல் இரும்பும் ஒரே நிறையையே உடையன. ஏனெனில் இரண்டுமே அளவில் மிக வித்தியாசமாய் இருந்தாலும், நிறையில் ஒரே அளவினதாகவே உள்ளது. நிறை என்பது ஒரு பொருளை பூமி ஈர்க்கும் விசையாகும்.



மாற்றான் தோட்ட மல்லிகை மணத்தல் மாற்றம்

# அட்டைப்பட நாயகன்

# மாற்கு

'யாழ்ப்பாணத்து ஓவியத்துறை யின் புதிய திருப்புமுனை' என்று கூறக்கூடிய அளவிற்கு நவீன ஓவியங்களுக்கு மெருகூட்டிய மாமனிதரே மாற்கு.

இவர் 1933ம் ஆண்டு ஆடித் திங்கள் 25 ஆம் நாள் பிறந்தார். மாற்கு சிறு வயதிலேயே ஓவியம் வரைவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் 1955 ஆம் ஆண்டு கொழும்பு நுண் கலைக் கல்லூரியில் சேர்ந்து ஐந்து வருடங்கள் பயின்று பட்டம் பெற்றார். 1958 ஆம் ஆண்டு 'விடுமுறை கால ஓவியர் கழகத்தை' யாழ்ப்பாணத்தில் அமைத்து இளைவல்களை பயிற்றுவித்து வந்துள்ளார். இந்த வகையில் ஓவியர் மாற்குவின் ஓவியத்துறைக் கான பங்களிப்பு அளப்பரியதாகும்.

இவருடனான பேட்டி ஒன்றை 1983 இல் ஈழத்து நகைச்சுவை ஏடான 'சிரித்திரன்' பிரசுரித்தது. 'அலை' சஞ்சிகை தனது 26, 29ஆம் இதழ்களில் மாற்குவைப் பற்றி எழுதியது. மல்லிகையும் துலங்கலும் மாற்குவைப் பற்றி கட்டுரைகளைப் பிரசுரித்திருக்கிறது. 'அலை' 'மாற்றம்' போன்ற சஞ்சிகைகளில் பல இதழ்களில் மாற்குவின் வரைபுகள் முகப்போவியங்களாக வெளிவந்துள்ளன.

மாற்குவின் ஓவியங்கள் மனிதனை வியக்கவைத்து சிந்திக்கத் தூண்டுகின்றது என்ற வகையில் அது கலையாகும். அதன் சிருஷ்டி கர்த்தவான மாற்கு கலைஞராக போற்றப்பட வேண்டியவர். இந்தக் கலைஞர் 'எதை உணருகிறாயோ எண்ணுகிறாயோ அதை வரை' என்ற ஆசிரியர் டேவிட் பெயின்ரர் கூறியதையே கொள்கையாக கொண்டு வாழ்பவர்.

மாற்குவின் ஓவியங்கள் 1980 களில் பல கண்காட்சிகளில் இடம் பெற்றுள்ளது. 1987 இல் தமிழியல் வெளியீட்டினர் 'தேடலும் படைப்புலகமும்' என்ற புத்தகத்தை பிரசுரித்து மாற்குவை கௌரவித்தனர்.

இவரது எளிமையான ஆடம்பரமில்லாத வாழ்க்கையே ஒரு ஓவியமாகும்.

---

*இச்சஞ்சிகை தமிழ்த்தாய் மன்றத்துக்காக புதிய செங்குந்த வீதியில் உள்ள வே. நவமோகன் யாதுமூரான் அவர்களால் குருநகர், யாழ்ப்பாணம் அன்னை அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டது.*

# NATHIYA JEWELLERY

அழகிற்கு
அழகுசெய்யும்

அழகிய தங்கப்பவுண்
நகைகளுக்கு

## நதியா நகை மாளிகை

2, கஸ்தூரியார் வீதி – யாழ்ப்பாணம்

உரிமையாளர்: சண்முகம் இராஜேஸ்வரன்.


PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

எத்திசையும் தித்திக்கும் தேன் சிந்தும்

## ஐஸ்கிறீம் வகைகள்

தயாரிப்பதில் முன்னோடிகள்

RATNAM INDUSTRIAL ORGANIZATION

றியோ

R I O

# றியோ

75, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.



PUBLIC LIBRARY, JAFFNA.
BRANCH LIBRARY